# உதயன்

விலை ரூபா 6-00

நடசர்13 வள்ளுவர் ஆண்டு2029 ஆவணி 15 திங்கட்கிழமை (31-08-1998) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 236



பொது சன நூலகம்
1 OCT 1998
மாநகராட்சி
யாழ்ப்


## நெல்லியடி பகுதியில் குண்டுத் தாக்குதல்

### இரு படையினர் பலி

யாழ்ப்பாணம், ஓக. 31

நெல்லியடியில் நேற்று முன்தினம் தோட்டம் ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இரு படையினர் கொல்லப்பட்டனர்.

குறித்த நேரம் வெடிக்கக் கூடிய குண்டே தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டதாக பலாலி இராணுவ தலைமையகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

குண்டுத் தாக்குதலில் காயம் அடைந்த ஒருவரும் மோதலில் காயம் அடைந்த ஒருவருமே கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

நேற்று முன்தினம் காலை 9 35 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது. [இ-109-173]

## பிரேதப் பெட்டிகளுடன் தமிழர்கள் தென்னாபிரிக்காவில் ஆர்ப்பாட்டம்!

லண்டன், ஓக. 31

இலங்கையில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்திச் சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்றை ஏற்படுத்துவதற்குத் தென்னாபிரிக்க அரசு முன்வரவேண்டும் என்று கோரி தென்னாபிரிக்கத் தமிழர்கள் பிரேதப் பெட்டிகளைத் தாங்கியவாறு நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

அணிசேரா நாடுகளின் மாநாடு தென்னாபிரிக்காவில் டார்பன் நகரில் நடைபெற்று வருகின்றது.

அந்த மாநாட்டு மண்டபத்துக்கு முன்பாகவே ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். தமிழீழ ஆதரவு இயக்கம் என்ற அமைப்பே இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது.

இலங்கையில் சிங்களவர்கள் வாழ்வது போல தமிழர்களும் வாழ்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இலங்கையில் நடைபெறும் யுத்தத்தால் தமிழ் மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். எனவே இந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கட்சிகள்-பீரிஸ் 10ஆம் திகதி சந்திப்பு!

## தீர்வில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையை நீக்குவதற்கு முயற்சி

கொழும்பு, ஓகஸ்ட் 31

**அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் தொடர்பான தேக்க நிலை குறித்து ஆராய நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளுடன் எதிர்வரும் 10 ஆம் திகதி பேச்சுக்கள் நடத்தவிருக்கிறார்.**

அரசு முன்வைத்த அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் தொடர்பாக ஐ. தே. கவும் தமிழ்க்கட்சிகளும் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

இதன் காரணமாக இந்த யோசனைகளை நிறைவேற்றுவதில் தேக்க நிலை நிலவுகிறது.

இது தொடர்பாகவே அமைச்சர் பீரிஸ் தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தவிருக்கிறார்.

ஐ. தே. க. ஒத்துழைக்க மறுத்து வருவதால் அரசின் இனப்பிரச்சினை தீர்வு யோசனையை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதில் சிக்கல் ஏற்பட்டிருப்பது தெரிந்ததே

(இ-3)

மெச்சந்தி ரேணி



அப்ப தேர்தல் இப்போதைக்கு இல்லைப் போல......!

# 2ரயில்கள் மோதின!

## ஐவர் மரணம்

கொழும்பு, ஓக. 31

குருநாகல் மாவட்டத்தில் மீரிகம ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்றுக் காலை 5. 30 மணியளவில் இரு ரயில்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஐவர் உயிரிழந்தனர்; 33 பேர் காயமடைந்தனர்.

சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

கொழும்பில் இருந்து குருநாகலுக்கு சென்று கொண்டிருந்த பயணிகள் ரயில் மீரிகம ரயில் நிலையத்துக்கு அருகில் தடம் புரண்டு பாதையை விட்டு விலகியது.

அச்சமயம் குருநாகலில் இருந்து கொழும்பு நோக்கிச் வந்து கொண்டிருந்த பயணிகள் ரயில் பாதையை விட்டு விலகிய ரயிலுடன் மோதியது.

இதன் காரணமாக ஐவர் உயிரிழந்தனர்; 33 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்துக் காரணமாக எட்டுப்பெட்டிகள் சேதமடைந்தன. ரயில் என்ஜினும் சேதத்துக்குள்ளாகியது.

நாசவேலைகள் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனச் சந்தேகம் எழுந்துள்ளதாகத் தெரிவித்த பொலீஸார் இது தொடர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் குருநாகலில் தாக்கப்பட்டனர்!

## முகமூடி அணிந்துவந்து குண்டு வீச்சு!

கொழும்பு, ஓகஸ்ட் 31

குருநாகலில் ஐ. தே. கவின் பிரசாரக் கூட்டத்துக்கு முன்னேற்பாடாக அலங்கார வேலைகளில் ஈடுபட்டிருந்த ஐ. தே. க. ஆதரவாளர்கள் மீது நேற்று அதிகாலை 1.30 மணியளவில் குண்டு வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இருவர் பன்னலவில் உள்ள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முகமூடி அணிந்த இருவர் சைக்கிளில் வந்து அலங்காரம் செய்து கொண்டிருந்தவர்கள் மீது இரு குண்டுகளை வீசியதாகவும்—

பின்னர் அங்கு நிறுத்தப்பட்டிருந்த லொறி ஒன்றின் மீதும் ஒரு குண்டை வீசிவிட்டு அவர்கள் தப்பி விட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# வாதரவத்தையில் படையினர் மீது சூடு

## பெண் புலிகள் தப்பினர்

யாழ்ப்பாணம், ஓக. 31

புத்தூர் வாதரவத்தையில் வீதித் தடைக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது பெண் புலிகள் பிஸ்டல் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3-00 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றதாகப் பலாலி இராணுவ தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதித் தடைக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினரை நோக்கிப் பிரஸ்தாப இரு பெண்களும் வந்து கொண்டிருந்ததை படையினர் அவதானித்ததாகவும் -

அவர்களில் ஒரு பெண் கர்ப்பிணி போன்று காணப்பட்டார் எனவும் -

படையினருக்கு 50 முதல் 75 மீற்றர் அருகில் அவர்கள் வந்தவுடன் அவர்களில் ஒருவர் படையினரை நோக்கி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தம் தணிந்த பின்னர் மாகாணசபைத் தேர்தல்

## அனுருத்த தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 31

வடக்கு — கிழக்கு யுத்தத்தின் உக்கிரநிலை தணிந்ததும் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படும்.

இப்படி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

தேர்தல்களை ரத்துச் செய்யவோ அல்லது நீண்டகாலத்துக்கு அதனைப் பின்போடவோ அரசாங்கம் உத்தேசித்திருக்கவில்லை.

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு பாதுகாப்புப் படையினரின் முழு அளவிலான தேவை அவசியம் என்ற காரணத்தினாலேயே மாகாணசபைத் தேர்தல்கள் சற்று ஒத்திவைக்கப்பட்டன; நிலைமை சீரடைந்ததும் இந்தத் தேர்தலை நடத்துவதற்கான திகதி பற்றி தேர்தல் ஆணையாளர் அறிவிப்பார். வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதால் புதிதாக வேட்புமனுக்கள் கோரப்படமாட்டாது.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-9)

# வன்னிப் போக்குவரத்து மீண்டும் நேற்றுத் தடை!

வவுனியா, ஓக. 31

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளுக்கான பயணிகள் போக்குவரத்துக்கு விடுதலைப்புலிகளின் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் தற்காலிகமாக தடைசெய்துள்ளனர் என வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில வாரங்களின் முன்னர் விடுதலைப்புலிகளால் தடை விதிக்கப்பட்டிருந்த இப் பாதையூடான போக்குவரத்து கடந்த வாரமே வழமைக்குத் திரும்பியிருந்தது.

மீண்டும் நேற்று முதல் இப்பாதையூடான பயணிகள் போக்குவரத்து தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளதாக அச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது. (இ-9-164)


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி எல்லைக்குள் 43 வீதிகள் திருத்தப்படும்

தென்மராட்சி, ஓக. 31

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 43 வீதிகள் திருத்தியமைக்கப்படவுள்ளன. இதற்கென 50 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா தெரிவித்தார்.

பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கச்சாய், சாரசாலை, கைதடி, நாவற்குழி, வரணி, மிருசுவில் ஆகிய உப அலுவலகப் பிரிவில் உள்ள சேதமடைந்த வீதிகள் மற்றும் மணல் வீதிகளுமே திருத்தியமைக்கப்படவுள்ளன. (ஐ–117)

---


புதிய பிரிவுகள்
ஆரம்பம்
05-09 98, 09-09 98
புதிய நேரம் 9 30 மணி

அனுபவம் மிக்க ஆசிரியரினால் தொழில் புரிவோர், மாணவர்கள், பல்கலைக் கழக அனுமதிபெற உள்ளவர்கள் போன்ற பல சாராருக்கும் ஏற்ற வகையில் பல துறைகளில் அடிப்படைக் கணனிப் பாடநெறிகளில் இருந்து கற்பிக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:

**C. S. A.**
ஆடியபாதம் வீதி,
நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

★ வறுமை மிக்க மாணவர்களுக்கு இலவசக்கல்வி.
(சி/4708)


---

# வீதியோரம் மண்மேடு போக்குவரத்து இடையூறு

உரும்பராய், ஓக. 31

மருதனார்மடம்— உரும்பராய் பிரதான வீதியில் வீதியின் இருமருங்கிலும் இருக்கும் மண் மேடுகள் அகற்றப்படாததனால் வாகனப் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. இது மருதனார்மடம் சந்தியிலிருந்து சுமார் 30 யார் தூரத்தில் உள்ளதனால் வாகன விபத்துகள் ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதாகப் பயணிகள் முறையிடுகின்றனர்.

இவ்விடத்தில்பாதுகாப்புப் படையினரின் சோதனை நிலையம் இருந்த போது மண்மூடைகள் அடுக்கப்பட்டிருந்தன; காலப்போக்கில் மண் நிரப்பப்பட்ட சாக்குகள் இற்றுப்போக இப்போது மண் மட்டுமே குவியலாக எஞ்சியுள்ளது.

இந்த இடத்தில் இப்போது சோதனைச் சாவடி எதுவும் இயங்கவில்லை.

---

## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

எமது இந்து மாணவர் மன்றத்தின் பொறுப்பாசிரியராக நெடுங்காலம் அரும்பணி ஆற்றி எம்மை வழிநடத்தி வரும் எமது மதிப்பிற்குரிய ஆசிரியை

திருமதி சௌந்தரநாயகி சரவணபவானந்தன்

அவர்களின் அருமைக் கணவர்

**சிவசப்பு சரவணபவானந்தன்**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு பேரதிர்ச்சி அடைந்தோம். அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் அவர் தம் குடும்பத்தினரின் மனச்சாந்திக்காகவும் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**இந்துமாணவர் மன்றம்,**
**வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

(58795)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

இணுவில

**வேலுப்பிள்ளை செல்லத்துரை**

(பிரபல சோதிடர்)

எமது ஆத்மீக நண்பர்

திரு. வரதன் மாஸ்ரரின்

தந்தையாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் நாமும் நெஞ்சத்தால் இணைந்து பிரார்த்திக்கின்றோம்.

**கார்த்திக் ஹாட்வெயர்ஸ்**
மலிபன் வீதி·புறக்கோட்டை. (58796)

---


## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி
இன்று மட்டும்
ரஜனி - பூர்ணிமா
நடித்த
**தங்க மகன்**
முதலாம் திகதி முதல்
சிவாஜி, முரளி,
ரோஜா, சுவலட்சுமி
மணிவண்ணன்,
செந்தில் நடித்த
**என் ஆசை ராசாவே**
(புதிய வெளியீடு)
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212223
(58486)

---

## சிவா திரை

சிவன் கோயிலடி
யாழ்ப்பாணம்.

10-30 மணிக்கு
சத்தியராஜின்
**கட்டளை**

2-30 மணிக்கு
அர்ஜுன் நடித்த
**தாயின் மணிக்கொடி**
(சி/4710)


---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரலோகேஸ்வரி முத்துத்தம்பி

உடுவிலைச் சேர்ந்த திருமதி பரலோகேஸ்வரி முத்துத்தம்பி அவர்கள் 30–8–98 அன்று காலை 5 மணியளவில் காலமானார்.

இவர் உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் செல்லையா — திருமதி சரஸ்வதிப்பிள்ளை ஆகியோரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற க. முத்துத்தம்பியின் (உரும்பிராய்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி இரத்தினாம்பாள், திரு. செல்வச்சிரஞ்சிவி(பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கி), திருமதி ஜெயலக்ஷ்மி, திரு. சுந்தரம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. க. இரத்தினம் (மலேசியா), காலஞ்சென்ற சண்முகலிங்கம் (உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, சுன்னாகம்), திருமதி கனகமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31–8–98) காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:–
திரு. இ புவனராஜா, பு கிசேவர்மா,
செ சுந்தரம்பிள்ளை.

கே. கே. எஸ். வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(58792)

---

### Dr. இராமலிங்கம் சதாசிவம்

(Retired R. M. P.)

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், பந்துராகொடவை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சதாசிவம் 27-08-98 வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - மாணிக்கம் தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற குசுமாவதி கங்கவத்தவின் அன்புக் கணவரும், சிவகங்கா, சிவகங்காதரன் ஆகியோரின் தந்தையாரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் சரஸ்வதி, மகாலட்சுமி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி (ஓய்வுபெற்ற உப அதிபர், உடுப்பிட்டி அ. மி. கல்லூரி) மற்றும் வயிரமுத்து (முன்னாள் முகாமையாளர், எரிபொருள் நிரப்பு நிலையம்), அருளானந்தம் (ஓய்வுபெற்ற லிகிதர், கச்சேரி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30-08-98 அன்று பிற்பகல் 3 மணியளவில் பந்துராகொட இல்லத்தில் நடைபெற்றன.

தகவல்:
அ. கிருஷ்ணேந்திரன்
(மருமகன்)

கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(58806)

---

### சிவசம்பு சரவணபவானந்தன்

(இளைப்பாறிய ஆசிரியர் அச்சுவேலி ம. வி,
வவுனியா தமிழ் ம. வி)

அச்சுவேலி தெற்கு சிவசக்தி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட சிவசம்பு சரவணபவானந்தன் 29. 08. 98 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான இளைப்பாறிய ஆசிரியர் சிவசம்பு-கமலாட்சி தம்பதியினரின் மகனும், சௌந்தரநாயகியின் (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், சிவதாசன், சுபத்ரா ஆகியோரின் அன்புத் தந்தையும், பவானந்தன் (அச்சுவேலி), திருமதி யோகேஸ்வரி இராஜதுரை(கொழும்பு) கருணானந்தன் (சுவிஸ்), ஆறுமுகானந்தன் (மனேஜர், உடுப்பிட்டி ப. நோ. கூ. ச.), குகேந்திரன் (கனடா), ஆனந்த சுந்தரன் (லண்டன்) ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர் க. சோமசுந்தரம் (சரவணை)— இராசம்மா ஆகியோரின் அருமை மருமகனும், பொன்னம்பலம்பிள்ளை (இறைவரித் திணைக்களம்), முருகவேள், மாணிக்கவாசகன், பேரின்பநாதன் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி), சிவகாமசுந்தரி, கந்தவேள், திருஞானசம்பந்தன், கௌரிநாயகி, இராசதுரை (கொழும்பு) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி சௌ. சரவணபவானந்தன்
(மனைவி)

227, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(58802)

---

## 31 ஆம் நாள் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



இறைவனடி சேர்ந்த
இணுவில்.

### வேலுப்பிள்ளை செல்லத்துரை

(பிரபல சோதிடர்)

தந்தையுருவில் எம்மைக் காத்த தெய்வம்
தாமாக நினைந்து எம்குறை களைந்த தெய்வம்
தாமதமின்றி தடுத்தாட் கொண்ட தெய்வம்
தரணியில் தலை சிறக்க வைத்த தெய்வம்
தன்னடி நின்று தருமம் காத்த தெய்வம்
தாம் கற்ற சோதிடத்தை தரணியில் அமிர்தமாக
ஊட்டிய தெய்வமே!

எங்கள் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் தந்தையாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்கு கொண்டவர்களுக்கும், இரங்கலுரை வழங்கியவர்களுக்கும், உரிய வேளையில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது குடும்பத்தாரின் உருக்கமான நன்றிகள்.

பாசமிகு துணைவியார்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

செ ஜெயசோதிவாதன்,
(வரதன் மாஸரர்)
ஜெய ஆனந்த வாசம்,
இணுவில் தெற்கு.

(58797)

---


## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம.
ரஜனி, மீனா
சரத்பாபு, செந்தில்
நடித்த
**முத்து**

## ராஜா 'B' திரை

யாழ்ப்பாணம்.
இன்று முதல்
சரத்குமார்
மீனா [இரு வேடம்]
மணிவண்ணன் நடித்த
நாடோடி மன்னன்
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)

## ராஜா கொமினிகேஷன்

உள்நாட்டு, வெளிநாட்டு
தொலைத்தொடர்பு
சேவையை
உடனுக்குடன்
பெற்றுக்கொள்ளலாம்:
Tele. No. 021 - 2318
(சி/4682)

---

Spoken English
With
Grammar
by: Mr. B. JOTHY
(B Com. Hons)
புதிய பிரிவு ஆரம்பம்:
02 - 09 - 98
புதன் 11 மணி
[illegible]
[illegible]
(58810)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்றில் ஆஜரான யானை!

திருவனந்தபுரம், ஓக. 31

கேரளமாநிலத்தில் அபூர்வமான ஒரு வழக்கில் யானை ஒன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டது.

நாராயணன் குட்டி என்று அழைக்கப்படும் அந்தயானை அதன் உரிமையாளருக்கும், அதைக் குத்தகைக்குப் பெற்றவருக்கும் இடையே ஏற்பட்ட தகராற்றை அடுத்தே அந்த யானை நீதிமன்றம் வந்தது. நீதிமன்றத்தில் ஆஜரான முதல் யானை என்ற பெருமையைப் பெற்றது. அத்துடன் குற்றம் எதுவும் செய்யாத நிலையிலேயே அது அஜர் செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## பாகிஸ்தானில்
## குரானும் நபிபோதனையும் அதி உயர் சட்டமாக்கப்படும்

இஸ்லாமாபாத், ஓக. 31

குரான் மற்றும் நபிகள் நாயகத்தின் போதனைகள் ஆகியவற்றை நாட்டின் அதி உயர் சட்டங்களாக ஆக்குவதற்கு பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு வசதியாக நாட்டின் அரசமைப்புச் சட்டத் திருத்தம் ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வரவும் அது தீர்மானித்துள்ளது.

சர்ச்சைக்குரிய இந்த விடயங்களை பிரதமர் நவாஸ் ஷெரீப் நாடாளுமன்றத்தில் அறிவித்தார். அவரது இந்த உரை வானொலியிலும், தொலைக்காட்சியிலும் விடுக்கப்பட்டது.

பாகிஸ்தானை இஸ்லாமிய நிலை நாடாகக் கொண்டுவர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்,

நீதி அமைப்பில் இஸ்லாமியச் சட்டம் மேலோங்குவது ஆப்கானிஸ்தானில் தலிபான் அமைப்பு நடைமுறைப்படுத்தும் கட்டுப்பாடுகளை பாகிஸ்தானிலும் கொண்டுவந்து விடுமோ என எதிர்க்கட்சிகளும், சிறுபான்மை இனக் குழுக்களும் அச்சம் தெரிவித்துள்ளன. (ஐ)

## டயானா மறைவின் ஓராண்டு நினைவு



லண்டன், ஓக. 31

வேல்ஸ் இளவரசி டயானா கார் விபத்தில் கொல்லப்பட்டு இன்றுடன் ஓராண்டு நிறைவடைகிறது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் 31 ஆம் திகதி டயானாவும் அவரது நண்பரான எகிப்திய கோடீஸ்வரர் டோடி அல்பெய்ட்டும் பயணம் செய்த கார் பாரிஸ் நகர வீதி ஒன்றில் சுரங்கப் பாதையோரம் — மோதி விபத்துக்குள்ளானதில் அவர்கள் இருவரும், கார்ச் சாரதியும் உயிரிழந்தனர்.

டயானாவை நினைவு கூர்ந்து பல நிகழ்ச்சிகள் இன்று இங்கிலாந்திலும் உலகின் பல பகுதிகளிலும் நடைபெறவுள்ளன. (ஐ)

# தென்னாபிரிக்காவில் நடக்கவிருந்த வாஜ்பாய், ஷெரீப் சந்திப்பு ரத்து!

டர்பன், ஓக. 31

தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் அணிசேரா நாடுகளின் 12 ஆவது உச்சிமாநாடு நேற்று முன்தினம் ஆரம்பமானது,

இந்த மாநாட்டில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கலந்து கொள்ளாததை அடுத்து டர்பெனில் புதன்று இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் நடைபெறவிருந்த சந்திப்புரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் — இந்தியப் பிரதமர்கள் 'சார்க்' மாநாட்டின் போது கொழும்பில் சந்தித்திருந்தனர். அதன் தொடர்ச்சியாக இருவரும் தென்னாபிரிக்காவில் சந்திப்பர் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதை பாகிஸ்தான் பிரதமர் இறுதி நேரத்தில் ரத்துச் செய்ததை அடுத்து இந்த சந்திப்பும் ரத்தாகியுள்ளது.

இம் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் வாஜ்பாய் டர்பென் போய்ச் சேர்ந்துள்ளார்.

பாகிஸ்தான் பிரதமரின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழு இம் மாநாட்டில் கலந்து கொள்கிறது.

உள்நாட்டு அலுவல்களால் நவாஷ் ஷெரீப் இந்தமாநாட்டில் கலந்து கொள்ளமாட்டார் என இஸ்லாமாபாத்தில் வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது. (ஐ-ரீ)

## 'ரிமோட் கொன்ட்ரோல்' மிதிவெடிகள் வரும்!

ரோக்கியோ, ஓக. 31

'ரிமோட் கொன்ட்ரோல்' மூலம் இயக்கப்படும் நிலக்கண்ணிகள், மிதிவெடிகளைத் தயாரிக்க ஜப்பான் திட்டமிட்டுள்ளது.

கண்ணிவெடிகளைத் தடை செய்யும் சர்வதேச உடன்படிக்கை ''ரிமோட் கொன்ட்ரோல்'' மூலம் இயக்கப்படும் கண்ணிகளைத் தடை செய்யவில்லை என்று ''நியூ சயன்ரிஸ்ற்'' என்ற வார சஞ்சிகை தெரிவித்துள்ளது.

மனிதர்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் கண்ணிகளை ஒட்டாவா உடன்படிக்கை தடை செய்யவில்லை என்று ஜப்பானிய பாதுகாப்பு ஏஜென்ஸியை மேற்கோள் காட்டி அச் சஞ்சிகை மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## அமெ. நாடாளுமன்றம் கிளின்ரனை கண்டிக்கும்?

வாஷிங்டன், ஓக, 31

வெள்ளை மாளிகையின் முன்னாள் பெண் உதவியாளர் மொனீக்கா லுவின்ஸ்கியுடன் முறைகேடான பாலியல் உறவுகளை வைத்திருந்ததற்காக அதிபர் பில் கிளின்ரனை அமெரிக்க நாடாளுமன்றம் கண்டிக்கக்கூடும் — என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

கிளின்ரன் மீது குற்ற விசாரணைப் பிரேரணை (இமபீச் மென்ற்) கொண்டுவருவதை விட இது தீவிரம் குறைந்தது எனக்கருதப்படுகிறது.

164 ஆண்டுகளுக்கு முன் 1834 இல் தனியார் வங்கி ஒன்றில் இருந்து அப்போதைய அதிபர் அன்ரு ஜாக்சன் முறைகேடாகப் பணம் எடுத்தமைக்காக அப்போது அவரை நாடாளுமன்றம் கண்டித்தது. (ஐ-6)

## உலக தகவல் தொடர்பை சிதைக்கும் காந்தப் புயல்?
### விஞ்ஞானிகள் எச்சரிக்கை

வாஷிங்டன், ஓக. 31

உலகத் தகவல் தொடர்புத் துறையை சிதைக்கும் வலிமையுடைய காந்தப் புயல் ஒன்று பூமிக்கு மேலே உருவாகி வருவதாக அமெரிக்க புவியியல் ஆய்வு அமைப்பு எச்சரித்துள்ளது.

சூரியனில் நிகழ்ந்த ஒரு வெடிப்பினால் விசையூட்டப்பட்ட துகள்கள் பூமியின் காந்த வலயத்துக்குள் எகிறி வந்து வீழ்ந்திருப்பதாகவும் —

இது புவி காந்தப் புயலின் தொடக்கமாக இருக்கலாம் என்றும் —

வாஷிங்டனியுள்ள புவியியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-6)

## இந்தியாவில்
## கடுகுஎண்ணெய் விற்பனை பல மாநிலங்களில் தடை!

புதுடில்லி, ஓக. 31

கலப்பட கடுகு எண்ணெயினால் புதுடில்லியில் நீர்க்கோர்வை மரணங்கள் நிகழ்ந்திருப்பதை அடுத்து மேலும் ஏழு மாநிலங்கள் கடுகு எண்ணெய் விற்பனைக்குத் தடை விதித்துள்ளன,

கடுகு எண்ணெய் 'சாம்பில்' எடுக்கும் இயக்கத்தை பல மாநிலங்கள் தீவிரப்படுத்தியுள்ளன. கடுகு எண்ணெய் விற்பதற்கும், முத்திரைகுத்தப்படாத கடுகு எண்ணெய் விற்பதற்கும் உத்தரப் பிரதேசம், இமாச்சல், ஒரிஸா, ஹரியானா, சிக்கிம், அஸாம், மணிப்பூர் ஆகிய மாநிலங்கள் நேற்று முன்தினம் தடை விதித்தன. புதுடில்லியில் தான் இதற்கு முதலில் தடைவிதிக்கப்பட்டது.

இதனை அடுத்து மத்திய அரசு எண்ணெய்த் தாங்கிகளில் வரும் உணவு எண்ணெய்களைக் கண்டிப்புடன் கண்காணிக்கும்படி மாநில அரசுகளைக் கேட்டுள்ளது.

மத்திய சுகாதார அமைச்சர்களின் உயர் அதிகாரிகள் புதுடில்லியில் நிலைமைகளை மதிப்பிட்டனர்.

உயிரைப் பறிகொள்ளும் நீர்க்கோர்வை நோய் பரவாமல் இருப்பதற்கு மத்திய சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலப்படம் செய்யப்பட்ட இந்த எண்ணெயால் டில்லியில் மட்டும் 21 பேர் உயிழந்தனர்.

மேற்படி எண்ணெயை தயாரித்த நிறுவனத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ-ரீ)

# கியூபா விமானம் விபத்தில்; 80 -க்கும் மேற்பட்டோர் பலி!

குயிற்றோ, ஓக. 31

'கியூபன் ஏயர்லைன்ஸ்' விமானம் ஒன்று ஈக்குவடோர் தலைநகர விமானத் தளத்தில் தரையிறங்கிய வேளை விபத்துக்குள்ளானதில் 80-க்கும் மேற்பட்ட பயணிகள் பலியாகினர். இவர்களில் பெரும்பாலானோர் சக்குவடோரி நாட்டவர்களாவர்.

விமானம் ஓடுபாதையில் இருந்து அருகே உள்ள உதைபந்தாட்ட திடலின் தடுப்புச் சுவர்களுடன் மோதிச் சிதறியது. விமானத்தின் சிதைவுகள் அருகே உள்ள குடியிருப்புக்கள் மீதும் சிதறிக்கிடந்தன. 80 உடல்கள் மீட்கப்பட்டதாக செஞ்சிலுவைச்சங்கம் தெரிவித்துள்ளது. மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றன.

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட இந்த விமானம் விபத்துக்குள்ளான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை.

குயிற்றோ நகரில் மிகவும் நெருக்கடியான இடத்தில் இந்த விமான நிலையம் அமைந்துள்ளது. (ஐ)

## சோனியாவுக்கு நோட்டீஸ்!

புதுடில்லி, ஓக. 31

ராஜீவ் காந்தி அறக்கட்டளை நிதி நிர்வாகம் தொடர்பாக சோனியா காந்தி உட்பட 8 பேருக்கு நீதிமன்ற நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

அறக்கட்டளையின் நிதி தவறாக நிர்வகிக்கப்படுவதாக மூத்த வழக்கறிஞர் பி. என். லேஹி தாக்கல் செய்த மனுவின் பேரில் இதற்கான உத்தரவை டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி எஸ்.கே. மகாஜன் வியாழக்கிழமை பிறப்பித்தார்.

அறக்கட்டளையின் கணக்கு வழக்குகள் குறித்து விசாரிக்கும்படி மனு கோருவதுடன் அறக்கட்டளை உறுப்பினராக நீடிக்கத்தகுதியற்றவர்களை நீக்குமாறும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## பஸ் விபத்தில் 30 பேர் பலி!

குயிற்றோ, ஓக. 31

ஈக்குவடோரில் இடம் பெற்ற பஸ் விபத்தொன்றில் 30- க்கும் மேற்பட்ட பயணிகள் பலியாகினர். விமான விபத்து இடம்பெற்ற சிறிது நேரத்தில் மற்றொரு நகரில் இந்த பஸ்விபத்து நடந்தது.

விருந்துபசாரம் ஒன்றில் கலந்து கொள்ளச் சென்று கொண்டிருந்தவர்களே இந்த பஸ் விபத்தில் [illegible] (ஐ)

## வலியின்றி மருந்து ஏற்ற புதிய ஊசி!

லண்டன், ஓக. 31

ஊசி மூலம் அன்றிவிசை மூலம் மருந்தை உடலில் செலுத்தும் நவீன ஊசியை (Needle - Free Injection) தயாரித்திருப்பதாக பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

தற்போது உள்ள முறைப்படி ஊசியைஉடலில் செலுத்தும்போது வலி மற்றும் பல அசௌகரியங்களும், ஆபத்துகளும் ஏற்படுகின்றன.

இந்தப் புதிய ஊசி மூலம் மருந்து ஒரு கருவியில் இருந்து வேகமாக உயர் அழுத்தத்தின் மூலம் உடலில் செலுத்தப்படும். சிறிதளவு வலியுடன் மருந்து தோலினூடாக உடலினுள் செல்லும். வலிஏற்படாதவாறு மருந்து உள்ளே துளைத்துச்செல்லும்.

மருத்துவத் தேவைகளுக்காக நாளாந்தம் ஊசி போட்டுக் கொள்பவர்களின் நலனை இலக்காகக் கொண்டு இந்த ஊசி தயாரிக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ...ரனஞ்சிறு விளம்பரம்

### ...ணமகள தேவை

...ழ் இந்து கௌரவமான ...ம்பத்தைச்சேர்ந்த கனடா...ல் Computer Enginneering டித்துக்கொண்டு இருக்கும் செவ்வாய் பாவமுடைய மண மகனுக்கு சிவந்த, அழகான, ஆங்கிலம் தெரிந்த 27 வய திற்குட்பட்ட மணமகள் தேவை. தொடர்பு: இல.775, மே/ ...ாஉகயன். [57768]

45 வயது, அரச உயர் பத வியிலுள்ள 8இல் செவ்வாய் உள்ள இந்து கௌரவ குடும் பத்தைச் சேர்ந்த மணமக னுக்கு மணமகள் தேவை. 40வயது 8இல் செவ்வாய் உள்ள மணமகளுக்கு மண மகன்தேவை. தொடர்புக்கு: 39, K. K. S. வீதி, கொக் குவில். (58775)

### மகாதேவா ஜோதிடம்

சோதிடரை 140, செபலர் வீதி (கல்வியங்காடு), நல் லூரில் தினசரி காலை 8-00 மணியிலிருந்து சந்திக்கலாம். (சி-4689)

### தவறிவிட்டது

111/9627 இலக்க மோட டார் சைக்கிளின் பதிவுப் புத்தகம், லைசென்ஸ், இன் சூரன்ஸ், வாகன சாரதி லைசன்ஸ் கொண்ட பேர்ஸ் கடந்த 27 ஆம் திகதி உடுப் பிட்டிக்கும், புறாப்பொறுக் கிக்குமிடையில் தவறிவிட் டது. கண்டெடுத்தவர்கள் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்கல்லூரியில் ஒப்ப டைக்கவும். [சி/4703]

சாமுவேல் மகேந்திரராஜா அரியதாசன் ஆகிய எனது தேசிய, விசேட அடையாள ட்டைகள் (551702995V, 0904012068) 28/08/98 அன்று சங்கானை — ஆனைக்கோட் டையில் தவறிவிட்டன. கண் டெடுப்பவர் சங்கானை தபாற்கந்தோரில் ஒப்ப டைத்து உதவவும். [58787]

### திருத்துதல

சகல கெமரா வகைகளும், எலக்ரோனிக் பிளாஸ் புகைப்படத்துறை துணைச் சாதனங்களும், மூக்குக் கண் ணாடி ஒட்டுதல் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, 301, கஸ் தூரியார் வீதி (மேல்மாடி), கன்னாதிட்டிச் சந்திக்கு அரு கில். (58741)

## சிவநெறி கல்வி நிலையம்

(ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்)

**O|L 1998**

**PAPER CLASS**

கணிதம்-
B. கிருபாகரன்

விஞ்ஞானம்-
I. தயாபரன்

கடந்த 10 வருட வினாத் தாள்கள் அலகு ரீதியாக மீட்கப்படும்.

**ஆரம்பம்**
05 - 09 - 98
மாலை 3.00 மணி

(58783)

# கால்நடை வளர்ப்போர் கூ. ச. இடமாற்றம்

வலிகாமம் தெற்கு, ஓக. 31

சுன்னாகம் எரிபொருள் நிலையத்துக்கு அருகில் இயங்கி வந்த தெல்லிப்பழை கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் தற்போது தெல்லிப்பழை பிரதேச செயலர் காரியாலயத்துக்கு முன்பாக உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்றது.

கடந்த வாரம் ஐ. நா. அபி விருத்தித்திட்ட அமைப் பினால் வழங்கப்பட்ட முட்டை பொரிக்கும் இயந் திரத்தில் தற்போது அங்கு பரீட்சார்த்தமாக முட்டை கள் அடை வைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின் றன.

இயற்கை முறையில் ஆடு கள் சினைப்படுத்தலுக்கென ஜமுனாப் பாறி, சணல் போன்ற ஆட்டுக்கடாக்களும் இங்கு வளர்க்கப்பட்டு இயற் கைச் சினைப்படுத்தல் மேற் கொள்ளப்படுகின்றது.

அத்துடன் கால் நடை களுக்கு தேவையான மருந்து வகைகள், தீவன வகைகளும் விநியோகிக் கப்பட்டு வரு கின்றன. (ஐ-152)

## நாதன்ஸ் தொலை தொடர்புச் சேவை

வேலாயுதம் மகாவித்தியாலய அருகில்
பிரதான வீதி, பருத்தித்துறை

(உடனடி சர்வதேச, உள்ளூர்த் தொடர்புகள்)

**இரவு பகல் சேவை**

சகல செய்திகளும் உடனுக்குடன் விநியோகம் செய்யப்படும்.

தொலைபேசி இல. 070 - 212279
வெளிநாட்டு அழைப்புக்கள் 0094 70 212279

(சி/4704)

# யாழ். பொலிஸ் பிரிவில் 15 ஆயிரம் வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், ஓக. 31

கடந்த கால வன்செயல் களினால் யாழ் பொலிஸ் நிலைய நிர்வாக எல்லைக் குள் 14 ஆயிரத்து 964 வீடு கள் சேதமடைந்துள்ளதாக கடந்த வாரம் வரை முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

வீடுகள் அழிவு மற்றும் சேத விவரங்கள் தொடர் பான முறைப்பாடுகள் பதி யும் நடவடிக்கை தொடர்ந்து யாழ். பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகி றது.

1996 ஆம் ஆண்டு தொடக் கம் இப்பதிவுகள் மேற்கொள் ளப்பட்டு வருவதாக யாழ். பொலிஸ் நிலைய வட்டாரங் கள் தெரிவித்தன. (ஐ-5)

## கண்ணீர் அஞ்சலி

**பொன்னையா தியாகராஜா**

(இ. போ. ச. கிளிநொச்சி, பருத்தித்துறை)

பொன்னையா தியாகராஜா அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரி விக்கிறோம்.

சக ஊழியர்கள்
இ. போ. ச. பருத்தித்துறை.

(53791)

## கண்ணீர் அஞ்சலி

சுன்னாகம் ஐயனார் தேவஸ்தான நிர்வாக சபையின் உப செயலாளராக அருஞ்சேவை ஆற்றி 28-08-98 இல் சிவபதமடைந்த சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த

**ஐயாத்துரை இராசரத்தினம்**

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்ப தோடு, அன்னாரை இழந்து துயருற்றிருக்கும் குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஐயனார் தேவஸ்தானம்
சுன்னாகம்.

(58790)

குப்பிளான்
**வீரமனை கன்னிமா கௌரி அம்பாள் ஆலய**

## இலட்சார்ச்சனைப் பெருவிழா

மேற்படி விழா 26 - 08 - 98 புதன்கிழமை தொடக் கம் 10 நாள்கள் தொடர்ந்து பி. ப. 2-00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

10 ஆம் நாள் 04 - 09 - 98 வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு சங்காபிஷேகமும் பி. ப. 1-00 மணிக்கு இலட்சார்ச்சனைப் பூர்த்தி விழாவும் நடைபெறும்.

பிரதமகுரு சிவஸ்ரீ சி. கிருஷ்ணசாமிக்குருக்கள்
(புன்னாலைக்கட்டுவன்)

(58786) பரிபாலனசபை

## கலாலயா பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

**மகளிருக்கான டிப்ளோமா மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்**

★ கேக் ஐஸிங்
(பட்டர் ஐஸிங், றோயல் ஐஸிங், பாச்மென்ட் ஐஸிங், புறோஸ்றிங் ஐஸிங், Fondant Icing மற்றும் மாச்சினி அலங்காரம்)

★ உணவு தயாரித்தல்
(கீழைத்தேச, மேலைத்தேச உணவுகள், சிற்றுண்டிகள், புடிங்வகைகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், சூப் வகைகள் தயாரித்தல் இத்துடன் உணவை அலங்கரிக்கும் முறை, மரக்கறிகளைக் குடைந்து உருவங்கள் செய்தல், மேசை அலங்காரம், உணவு பரிமாறும் விதம்)

★ உடை தயாரித்தல்
(குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள், கதிரை விரிப்பு, தலையணை உறை தைத்தல், பூப்போடுதல்)

★ பூ வேலை
(ஸ்ரொக்கிநெற், டிப் இன் மலர்கள், Panclay மலர்கள், பேப்பர் றிபன் மலர்கள், துணியினால் மலர்கள், மலர்ச்செண்டுகள் Bouquete) செய் தல்)

★ கை வேலை
(பேப்பர் அலங்காரம், Soft Toys, வைக்கோல் வேலை, கழிவுத்துணி வேலை, கம்பளி நூல் வேலை)

ஆகிய பயிற்சிகள் பயிற்றுவிக்கப்படும். மேற்படி பயிற்சிகள் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், கோலம் வகுப்புக்கள் நடை பெறும்.

❉ பயிற்சிக் காலம் 6 மாதம்
❉ பயிற்சியின் முடிவில் டிப்ளோமா தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
❉ இப் பயிற்சிக்கு வயதெல்லை கிடையாது.
❉ கிழமை நாள் பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாள்களில் காலை 9-00 மணிமுதல் பி. ப. 1-00 மணிவரை நடைபெறும்.
❉ சனி, ஞாயிறு பயிற்சிகள் காலை 9-00 மணி முதல் பி. ப. 2-30 வரை நடைபெறும்.

புதிய சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம்: 06 - 09 - 98
புதிய கிழமை நாள் வகுப்புக்கள் ஆரம்பம்: 07 - 09 - 98

இயக்குநர்

(சி/4693)

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 07 — 02 — 1947



விண்ணில் 29 — 08 — 1990

திருமதி
**இராஜேஸ்வரி கதிரவேலு**

திதி: 31 - 08 - 98 நவமி

ஆண்டுகள் எட்டு ஆகிவிட்ட போதிலும்
உங்கள் அன்பு நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
சகோதர சகோதரிகள், பேரப்பிள்ளைகள்,
ஆசைப்பேர்த்தி (ஹம்சிகா) மற்றும்
உறவினர்கள்.

இல. 29, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை.

(58766)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தொழிற் பயிற்சிகள்

RADIO & ELECTRONICS
காலம் 9 மாதம்

ELECTRICAL WIRING
(House Wiring உட்பட)
காலம் 3 மாதம்

- இலகு விரிவுரைகள்
- கூடிய செய்முறைகள்
- பரீட்சை முடிவில் தகுதியான சான்றிதழ்

ஆரம்பம்: **02 – 09 – 1998**

விவரங்கட்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

(C/4696)

# பாலர் ஆசிரியராக பயிற்சி

க. பொ. த. சாதாரண தரம் அல்லது மேல் தகைமை – தபாலில் ஆறு மாதங்களில் பயிலலாம்.

**பாலர் ஆசிரியர் சங்கம்**

20, அச்சக ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(58453)

## நிவாரண வெட்டில்

# முறைகேடுகள் இருப்பதாக பொதுமக்கள் முறையீடு

வலி; தென்மேற்கு, ஓ. 31 போதிய காரணமின்றி உலர் உணவு நிவாரணம் வெட்டப்பட்ட குடியிருப்பாளர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்கு தினமும் படையெடுத்து வருகின்றதைக் காணக் கூடியதாக உள்ளது;


வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சில கிராம அலுவலர் பிரிவில் பலகுடும்பங்களின் உலர் உணவு நிவாரணம் காரணமின்றி வெட்டப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன;

இதே வேளை—

ஆனைக்கோட்டைப் பகுதியில் பிரபல வர்த்தகரின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ள அதே நேரம் அவ்வீட்டில் வேலை செய்யும் கூலியாள்களுக்கு நிவாரணம் வெட்டப்பட்டுள்ளதாக எமது செய்தியாளரிடம்குறை தெரிவிக்கப்பட்டது.

(ஜ–185)

# 34 ஆவது பிறந்தநாள் நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்



பிறப்பு 31 - 08 - 1964 அநியாய அழிப்பு 16 - 01 - 1997

## சீவரட்னம் உதயகுமார்

(கலட்டிக் கண்ணன்)

கண்ணான கண்மணியே – எங்கள்
கண்ணின் கருமணியே கண்ணா!
எங்கள் நந்தவனத்தில் மலர்ந்து
இன்றொடு முப்பத்துநான்காண்டுகள்
மலர்வை எண்ணி மகிழவா – உன்
மறைவை எண்ணிக் கலங்கவா?

என் உயிரில் கலந்தவரே
நீர் இப்புவியில் மலர்ந்து இன்றுடன்
முப்பத்துநான்காண்டுகள். ....
சொற்பிரயோகத்தில் விவரிக்க முடியாத
உம்மைப் பற்றிய ஒற்றை நினைவே......
அக்னி ஊற்றாக என் மன ஆழத்தில்
பிரவகித்து ஓடிக் கொண்டிருக்கிறது...
அல்லல் மிகு உலகினிலே ஆறாது என் துயர்
மாறாது உங்கள் நினைவுகள் ஐயா!

ஆரும் பெறுதற்கரிய அன்பான அப்பாவே
அநியாய அழிப்பில் உமை இழந்தோம் அப்பா!
ஆவி பிரியும் போது யாரைத்தான் நினைத்தாய்
அப்பா!
உமை இழந்த அந்தத் துயரவெம்மையை
எம்மால் தாங்க முடியவில்லையப்பா!

ஒரு கூட்டுப் பறவைகளாய்
ஒற்றுமையாய்ப் பலகாலம்
உறவாடி மகிழ்ந்திருந்தோம்
கழிந்து விட்ட காலங்கள்
கனவுகளாய் போனதுவே
எம் இனிய உடன் பிறப்பே கண்ணா!
நயவஞ்சகரின் சதிக்கு நரபலியானீரே
நீர் முத்துக்கள் நிறைந்த கண்களுடன்
இன்றைய இனிய நாளையும்
எமைப் பிரிந்த துயர நாளையும்
எண்ணி எண்ணி என்றுமே கலங்குகிறோம்;
உம் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்:

குடும்பத்தினர்-

குற்றாலம்,
77/58, இராமநாதன் வீதி,

(58773)

# புறநிலைப்படிப்புகள் அலகு

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு பின்வரும் தலைப்புகளில் அடிப்படைக் கற்கை நெறிகளை நடத்தவுள்ளது. இவை சனி, ஞாயிறு தினங்களில் பல்கலைக்கழகத்தில் இடம் பெறும். இக்கற்கை நெறிகளைப் பயில ஆர்வங் கொண்ட 18 வயதுக்கு மேற்பட்ட எவரும் தமது முகவரியுடன்கூடிய முத்திரை ஒட்டப்பட்ட விண்ணப்பப்படிவம் மூலம் அடிப்படைக் கற்கைநெறியின் தலைப்பைக் குறிப்பிட்டுத் தனித்தனியாக விண்ணப்பிக்கவும். ஒருவர் எத்தனை கற்கை நெறிகளுக்கும் விண்ணப்பிக்கலாம், ஒரே நேரத்தில் ஒரு கற்கை நெறியையே பயில அனுமதிக்கப்படுவர்.

ஆரம்பிக்கவிருக்கும் அடிப்படைக் கற்கை நெறிகள் பின்வருமாறு:

1. தொடர்பியலுக்கான ஆங்கிலம் (English for Communication,
2. நில அளவையும், படவரைகலையும்(Surveying & Mapping)
3. சூழல் முகாமைத்துவம் (Enviromontal Management)
4. அலுவலக முகாமைத்துவம் (Office Management,
5. தரவு சேகரித்தலும், ஆவணமாக்கலும்
6. பொது வாழ்வில் பிரயோக எந்திரப் பொறியியல் (Applied Mechanica Engineering in Common Life)
7. வாகனப் பொறியியல் (Automobile Engineering)

மேலும் விசேடமாகக் கற்கை நெறிகளைக் கற்பதற்குப் போதியளவு எண்ணிக்கையினர் கோரிக்கைவிடும் இடத்து அவற்றைக் கற்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பொது மக்களிடமிருந்து கற்க விரும்பும் கற்கை நெறிகள் பற்றிய விவரங்களை புற நிலைப் படிப்புகள் அலகு அறிய விரும்புகிறது. தயவு செய்து எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும்;

குறிப்பு:

6ஆவது, 7ஆவது கற்கை நெறிகளுக்கு தற்போது தொழிற் கூடங்களில் வேலை செய்வோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
26 – 08 – 98
புறநிலைப்படிப்புகள்
அலகு
யாழ்ப்பாணம்.

(C/4683)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் வேலுப்பிள்ளை செல்லத்துரை**

எமது பாடசாலையின் ஆசிரியர்
திரு. செ. ஜெயசோதிவரதனின்
பாசமிகு தந்தையார்

பிரபல சோதிடர் வேலுப்பிள்ளை செல்லத்துரை அவர்கள் திடீர் மறைவுற்றதையறிந்து வருந்துகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

-அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/உயரப்புலம் மெ மி. த. க. வித்தியாலயம்,
ஆனைக்கோட்டை.

(58762)

# கண்ணீர் அஞ்சலி

28 – 08 – 98 அன்று அமரத்துவமடைந்த
எமது சகமாணவி
மேகலா அவர்களின் தந்தையாரான

**A. ராஜரட்னம்**

அவர்களுக்கு

எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் பிரிவால் ஆழ்ந்த துயரத்தில் வாடும் குடும்பத்தினர்களுக்கு எமது இதய பூர்வமான அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மருத்துவபீட நண்பர்கள் (96/97),
கொழும்பு பல்கலைக்கழகம்.

(58785)

# நன்றி கூறுகின்றோம்

**அமரர் ச. கார்த்தி** அவர்கள்
கைதடிச் சந்தி

எங்கள் ஐயாவின் இறுதிச்சடங்கிலும், 31ஆம்நாள் நினைவு தினமான அந்தியேட்டிக கிரியைகளிலும் (29-08-98) கலந்து கொண்டவர்களுக்கும், பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும், கைதடி ஆரிய பவான் உரிமையாளர் ஆர். செல்லத்துரை அவர்களுக்கும் மற்றும் அயலவர், நண்பர்கள், உறவினர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்.

கைதடிச் சந்தி,
கைதடி.

(58774)

# யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

## ‘பிறின்சஸ் காஷ்’ கப்பலில் பொருள்கள் ஏற்றிப்பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கான வேண்டுகோள்

‘பிறின்சஸ் காஷ்’ கப்பலில் பொருள்கள் ஏற்றிப் பாதிக்கப்பட்ட சகல வர்த்தகர்களும் தங்களின் இழப்பீடு தொடர்பான கீழ்க் குறிப்பிடப்பட்ட சகல ஆவணங்களையும் கோவைப்படுத்தி மூலப் பிரதியுடன் மேலும் இரண்டு பிரதிகளையும் 05 – 09 – 98ற்கு முன் எமது அலுவலகத்தில் கையளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

1) கப்பல் முகவர்களால் கையளிக்கப்பட்ட பி. எல்(B L)
2) பொலீஸ் அறிக்கை
3) பொருள் கொள்வனவிற்கான பற்றுச்சிட்டை

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

இல. 19, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

(இ-4697)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மாநகரசபை
## கூறுவிலை அறிவித்தல்

கீழ்க்காணும் விவரப்படியான மின் பிறப்பாக்கியையும் ஒலிபெருக்கி சாதனங்களையும் வழங்கக் கூடியவர்களிடமிருந்தான கூறுவிலைகள் எதிர்வரும் 03—09—98 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணி வரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப் படும்.

1. Diesel Generator 10KVA-(i)3,380v/440v 50Hz
   (ii) Lister Engine
2. Ahuya SSB 60 - 60 Watts Amplifier
3. Ahuya 21'' Trumper Horns
4. Ahuya60 Watts Driver Units
5 Floor Stand
6 Ahuya AUD77 Microphone
7. Roll of 14/036 T/T/flex wire
8. Roll of Single Microphone Cable

மேலதிக விவரங்களுக்கு மாநகர சபையின் கொள்வனவுப் பிரிவுடன் தொடர்பு கொள்ளலாம்.

சு. பத்மநாதன்
பதில் ஆணையாளர்,
யாழ். மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 29—08—1998. (சி/4701)

## நவாலியில் வாய்க்கால் திருத்த வேலை

நவாலி வடக்கிலுள்ள கல் ஒழுங்கை — விவசாய வாய்க்கால் நாளை முதல் திருத்தப்படவுள்ளது.

நவாலி விவசாயிகள் சம்மேளனத்தினால் உலக உணவு ஸ்தாபனத்திட்டத்தின் கீழ் இவ் விவசாய வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந் நிகழ்வில் யாழ். கமநல கேந்திர நிலைய சிரேஷ்ட தொழில் நுட்ப உத்தியோகஸ்தர் க. ஆனந்தராசா, உடுவில் பெரும்பாக உத்தியோகஸ்தர் பொ. குகநாதன், நவாலி விவசாயிகள் சம்மேளனத் தலைவர் மா. செல்வராசா ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். (ஐ-185)

## 38 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கத்தின் 38 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 02 - 09 - 98 புதன்கிழமை காலை 9-30 மணிக்கு தலைவர் வே. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் மணிக்கூண்டு வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தரும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்

(சி-4684)

## கணனி (COMPUTER) மூலம் ஜாதகங்கள்

ஜாதகங்கள் மிகவும் துல்லியமாகக் கணனி மூலம் சகல நாட்டிற்கும், முக்காலத்திற்கும் வேண்டியவாறு தேவையான பொதுப்பலன்களுடனும், மும்மொழிகளிலும் அழகாகக் கணித்துப் பெற்றுக் கொள்ளலாம். பெயர், பிறந்த திகதி, நேரம், ஜனன ஊர், நாடு ஆகிய முழுவிவரங்களுடனும் தொடர்பு கொள்க. ஜோதிடர்கட்கும் ஜாதகங்கள் தகுந்த கழிவுடன் தொகையாகக் கணித்துத் தரலாம்.

விவரங்கட்கு:

சிவஸ்ரீ க. கிருபானந்தக் குருக்கள்
பருத்தித்துறை வீதி, கிராம்புவில்,
சாவகச்சேரி.

(58763)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 — 07 — 1982



உதிர்வு 06 — 08 — 1992

**செல்வி தம்பிராசா சர்விழி**
**(கிளி)**

(ஏழாலை மேற்கு சைவசன்மார்க்கவித்தியாசாலை மாணவி)

திதி: 31 — 08 — 1998

எங்கள் அன்புச் செல்வமே!
ஆண்டுகள் ஆறு சென்றாலும் ஆறாதம்மா உன் பிரிவுத்துயர். எம் மனக் கண்ணுலகில் வாடா மலரம்மா. உன் எழிலுருவம்.
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர்,
சகோதர சகோதரிகள்.

கோட்டைக்காடு,
மல்லாகம். (58752)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## இராமநாதன் நுண்கலைத்துறை

இசைமாணி/ நாட்டியமாணி
இசைக்கலைமாணி/
நாட்டியக் கலைமாணி/
புதிய அனுமதி
1997 / 98
தெரிவுப் பரீட்சை

மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பித்த தகுதியுள்ள மாணவர்களுக்கு செய்முறைப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதியட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் உதவிப் பதிவாளர்/ பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி பரீட்சைகள் 07 - 09 - 1998 திங்கட் கிழமை முதல் 11-09-1998 வெள்ளிக்கிழமை வரை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளன.

— பதிவாளர்
26 - 08 - 1998
(சி-4692)

## வாங்க, விற்க, திருத்த ரீ.வி.

நல்ல நிலையில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டிகள் (ரீ. வி.) வாங்கப்படும். பாவித்த பழுதடைந்த ரீ. விகள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். திருத்தித் தரப்படும். ரீ. வி. அன்ரனா பொருத்தப்படும்.

**வீனஸ் டெல்கா**
284, ஸ்ரான்லி வீதி (நாகவிகாரை முன்)
யாழ்ப்பாணம்.
TEL. 2064

கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி.
(மீன் சந்தை அருகில்)

(சி/4680)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

## SIDDHA MEDICINE NEW ADMISSION 1996/ 97

Applications are invited from the candidates who obtained passes in all four subjects in the G. C. E. (A/L) Examination held in 1994/1995/1996.

Qualifications:

Passes in all four subjects - Chemistry, Zoology, Botany and Physics and should have obtained 180 marks or more.

Applications should be sent on specified form on a peyment of Rs 20 each obtainable in the fallowing places:

1. The Assistant Registrar, Exams & Admissions Branch, University of Jaffna, Jaffna. — Payment by cash at the Shroff's Counter or by money order drawn in favour of Bursar, University of Jaffna, Jaffna.
2. Co-operative Stores Ltd., 154, Woulfendal Street, Colombo - 13.
3. The Rector, Vavuniya Campus, Station Road, Vavuniya. — Payment by money order drawn in favour of Bursar, University of Jaffna, Jaffna.

Date of Closing is 30 - 09 - 1998.

Request for application by post should be accompained by postal order or money order for Rs. 20 drawn in favour of the "Bursar, University of Jaffna, Thirunelvely" and a self addressed stamped envelope not less than 9''x4'' size.

Late applications cannot be entertained.

Registrar.

25-08-98. (C/4691)

## YOGI HOME SCIENCE ACADEMY

### புதிய வகுப்புகள் 05 - 09 - 98 முதல் ஆரம்பம்

1) இலகுவழித் தையல் (Cutting Classes)
2) கேக் ஐசிங் (Birthday Cakes and Wedding Structures)
3) மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள் (Fondant Icing and Sugar Craft)
4) நவீன சமையல் முறைகள்
5) பூக்கள் தயாரித்தலும் அலங்கரித்தலும்
6) துணியில் வர்ண அலங்கரிப்பு 7 வகுப்புக்கள் மட்டும் (Modern Fabric Paintings)

**விசேட பயிற்சி நெறிகள்:**
Basic Make - Up and Hair Dressing
(அடிப்படை ஒப்பனையும், தலை அலங்காரங்களும்)

இதில் பாடக்குறிப்புகளுடன் கூடிய செய்முறை விளக்கங்கள், சகல வைபவங்களுக்குமான முக ஒப்பனைகள் நவீன புதியதலை அலங்காரங்கள், இந்திய, சிங்கள, குஜராத்தி மடிசார் போன்ற வித்தியாசமான சாறி அணியும் முறைகள், இந்த பயிற்சி நெறி 15 வகுப்புகள் மட்டும். முடிவில் செயல் முறை பரீட்சைகள் மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகளும் மற்றும் சேரவிரும்பும் மாணவிகளும் உடன் தொடர்பு கொள்ளவும்.

75, அம்மன் றோட் (நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## புதிய வழி நாடட்டும்

தென்னிலங்கையில் தேர்தல் பற்றிய பேச்சு எழுந்துள்ளது. இந்த வருட இறுதியில் அல்லது அடுத்த வருட முற்பகுதியில்திடீர்த் தேர்தல் ஒன்று வரலாம் என்று பல வட்டத்தினர்களும் எதிர்பார்க்கிறார்கள். அனேகமாக ஜனாதிபதித் தேர்தலே நடைபெறும் என்பது மிகப் பலரின் கணிப்பு

இத்தகைய பின்னணியிலேயே—

தமது கட்சி ஆட்சிக்கு வந்தால் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனைகள் எதுவும் விதிக்காமல் நேரடியாகப் பேச்சு நடத்தப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின்— எதிர்க்கட்சியின்— தலைவர் ரணில் விக்கிரமசிங்கா "சஞ்சீவிக்கு" வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்திருக்கிறார்.

ரணிலின் இந்த அறிவிப்புக்கள் அனேகமாக தேர்தல் வாக்குறுதிகளாகவே தோற்றமளிக்கின்றன. கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக தமிழர் விவகாரம் தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும், தேர்தல் வாக்குறுதிகளிலும் பிரதான இடம்பிடித்து வருகிறது. எனினும் அந்த வாக்குறுதிகள் செயல் வடிவம் பெறாமலே காற்றினிலே கரைந்துவிடுவதே கண்ட மிச்சம்!

எதிர்க்கட்சியில்இருக்கும் போதும், தேர்தல் வேளைகளின் போதும் தமிழர் நலன்களின், அவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறை கொண்டுள்ளதாகக் காட்டிக் கொள்ளும் தெற்கின் தலைவர்கள், ஆட்சிக் கட்டிலில் ஏறியதும் வார்த்தை தவறி விடுகிறார்கள்; வாக்குறுதிகளை மறந்து விடுகிறார்கள்! இதுவே வரலாறும் அனுபவமும் ஆகியுள்ளது

முந்திய தலைவர்களின் வழியில், இதுவரையில் உள்ள நடைமுறைப் பிரகாரம், ஏனைய கட்சிகளுடன் கருத்தொற்றுமை கண்டு பிரச்சினையைத் தீர்க்கப் போவதாகவே ரணிலும் கூறுகிறார். இந்த வழிமுறை ஜே. ஆர். காலம் தொட்டு இன்று வரை தோல்வி கண்டு வருகிறது.

ஆகையால் அந்த வழிமுறையை ஒதுக்கிவிட்டு, தமிழர்களுக்கு அவர்களின் நியாயமான உரிமைகளை வழங்கும் ஒரு தீர்வை தேர்தல் காலத்தில் அறிவித்து, சிங்கள மக்களின் ஒப்புதலை பெற்று அதனை நிறைவேற்றும் புதிய வழியை நாடுவதன் மூலமே தீர்வு ஒன்றைக் காண்பது சாத்தியமாகும்.

வடக்கு — கிழக்கு இணைந்த மாநிலத்தில், தன்னாட்சி உரிமை கொண்ட அரசு ஒன்றை நிறுவி, தமது அலுவல்களைத் தாமே செய்து, தமது பிரதேசத்தைத் தாமே வளமாக்க வகை செய்யும்ஆட்சி அமைப்பே தமிழர்களின் குறைந்த பட்ச அபிலாசை இதனை அடிப்படையாகக்கொண்டு தீர்வு வகுத்து தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்க்க வேண்டும். தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்ததும் தமிழர் தரப்புடன் நேரில் பேசி அதனை நிறைவேற்ற வேண்டும். அதற்கான அரசியல் துணிவும், நேர்மையும் தேவை.

தெற்குத் தலைவர்கள் தேர்தல் வேளையில் அவ்வழியை நாடட்டும்.

## தேங்கியுள்ள பதிவுத் தபால்களையும் விமானம் மூலம் அனுப்ப முயற்சி

யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ். கொழும்பு சேவையில் ஈடுபட்டு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் பதிவுத் தபால்களை விமானம் மூலம் அனுப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகவலை பதில் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம்(வட மாகாணம்) அ.க. சிவஞான சுந்தரம் தெரிவித்துள்ளார்.

உதயன் 27-08-98 ஆம் திகதிய இதழில் பிரசுரமான 8 ஆயிரம் பதிவுத் தபால்கள் யாழ்ப்பாணத்தில் தேக்கம் என்ற செய்தி தொடர்பாக விளக்கமளித்து அனுப்பிய அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவரது விளக்கத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பதிவு செய்யப்பட்ட கடிதங்கள் தொடர்பில் சில திணைக்கள நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டியிருப்பதால் அவை விமானம் மூலம் அனுப்பப்படாமல் கப்பல் மூலமாக வாரத்தில் ஒரு தடவை அனுப்பப்படுகின்றன. கப்பல் மூலமான தபால் சேவை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அனுசரணையுடனே நடத்தப்படுகின்றது. இவர்களால் சேவைக்கு அமர்த்தப்பட்ட கப்பலில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுவதால் பதிவுக் கடிதங்களை அனுப்பி வைப்பதில் தாமதம் ஏற்பட்டது.

இந்தத் தாமதத்தினைத் தவிர்க்குமுகமாகவும் தற்காலிகஏற்பாடாகவும் இயன்றளவு பதிவுக்கடிதங்களை விமானம் மூலம் அனுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன—என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-5)

## சந்நிதி உற்சவ கால நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 31

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய உற்சவ காலத்தையொட்டி சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவை ஒழுங்கு செய்துள்ள தெய்வீகக் கலை நிகழ்ச்சிகளில் —

இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் உடுப்பிட்டி கீதாலயா இசைக்குழுவினரின் பக்திப்பாடல்கள இடம் பெறவுள்ளன.

(ஐ-8, 30–173)

## சாவகச்சேரி வீடுகளுக்கு புதிய மின்மானிகள்

சாவகச்சேரி, ஓக. 31

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரிப் பிரதேச அலுவலகம் தமது பிரதேசத்தில் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள மின் பாவனையாளர்களின் வீடுகளுக்கு புதிய மின்மானிகளைப் பொருத்தி வருகின்றது. அத்துடன் புதிய மின் இணைப்பு வயர்களையும் மாற்றம் செய்து வருகின்றது.

இதேவேளை—

மின் பாவனையாளர்கள் தமது வீடுகளில் மின்சாரத்தைப் பாவிக்கும் சந்தர்ப்பங்களில் ஏனைய மின் பாவனையாளர்களும் சீரான மின்விநியோகத்தைப்பெறும் விதத்தில் மூன்று மின்குமிழ்களை மட்டும் பாவிக்கும்படி இலங்கை மின்சாரசபை அறிவுறுத்தியிருந்தும் பொது மக்களில் சிலர் வீடுகளில் மேலதிகமாகமின் குமிழ்களை எரியவிட்டு சீரான மின் விநியோகத்திற்கு தடங்கலை ஏற்படுத்தி வருகிறார்கள் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஐ-31)

## நவாலிப் பகுதியில் தொடர்ந்து திருட்டுக்கள்

வலி.தென்மேற்கு, ஓக. 31

நவாலி வடக்கில் இரவு நேரத் திருட்டுக்கள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

நாச்சிமார் வீதியில் உள்ள வீடொன்றில் இருந்து சனி இரவு ஓடுகளைத் திருட முயன்ற ஐவர் அயலவர் ஒருவரின் முயற்சியால் கையும் மெய்யுமாகப் பிடிபட்டவேளை இருவர் தப்பி விட்டனர்.

வெள்ளிக்கிழமை இரவு ஒரு வீட்டில் இருந்த நிவாரண உலர் உணவுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. புலவர் வீதியில் வசிக்கும் மாதாந்த உதவிப் பணம் பெறும் வயோதிபப் பெண் ஒருவரது வீட்டில் அவர் சேகரித்து வைத்திருந்த அரிசி, சீனி உட்பட நிவாரணப் பொருள்களே திருடப்பட்டன.

(ஐ – 185)

## சந்நிதி கோயிலுக்கு விசேட பஸ் சேவைகள்

வடமராட்சி, ஓக. 31

சந்நிதி கோயில் உற்சவத்தை ஒட்டி, வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச்சாலை விசேட பஸ் சேவைகளை நடத்தி வருகிறது.

பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறை ஊடாக யாழ்ப்பாணத்துக்கு நடைபெற்றுவரும் 751 ஆம் பாதை இலக்க பஸ்சேவைகள் யாவும் சந்நிதி ஊடாகவே நடைபெற்று வருகின்றன. அத்துடன் பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறை, நெல்லியடி, உடுப்பிட்டி ஆகிய இடங்களை இணைத்து சந்நிதிக்கு குறுந்தூர பஸ் சேவை ஒன்றும் தினமும் நடத்தப்பட்டு வருகிறது.

(ஐ-173)

## சிவப்பிரகாசம் வீதியின் ஒரு பகுதி பலத்த சேதம்

யாழ்ப்பாணம், ஓக. 31

வலி. மேற்கில் இருந்து யாழ். நகருக்கு வரும் சகல வாகனங்களும் பயணம் செய்யும் வண்ணார்பண்ணை மேற்கிலுள்ள சிவப்பிரகாசம் வீதியின் ஒருபகுதி பலத்த சேதமடைந்துள்ளது.

இவ் வீதியின் ஒருபகுதி இவ்வாறு சேதமடைந்திருப்பதால் வாகனங்கள் செல்வதும் பாதசாரிகள் செல்வதும் சிரமமாகியுள்ளது. வீதியால் செல்லும் வாகனங்கள் வீதியின் ஓரத்துக்கு வருவதால் பாதசாரிகள் உயிராபத்துக்களைச் சந்திக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

சைக்கிள்கள், மோட்டார்சைக்கிள்கள் மூலமும் தினமும் ஏராளமானோர் இவ் வீதியைப் பயன்படுத்த வேண்டி உள்ளது. பாடசாலை மாணவர்களும் இவ் வீதியூடாகச் செல்ல வேண்டி உள்ளது.

நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் உள்ள இந்த வீதியின் ஒருபகுதியைத் திருத்த உடன்நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் பலர் ஒப்பமிட்டு யாழ். நகரத் தளபதி பிரிகேடியர் சுசந்த மெண்டிஸுக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

(ஐ)

## திறந்த பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கை நெறிக்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஓக. 31

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் 1998 — 2000 ஆம் ஆண்டுக்கான டிப்ளோமா முகாமைத்துவக் கற்கை நெறிக்கான விண்ணப்பப்படிவங்கள் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளன.

18 வயதுக்கு மேற்பட்ட ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடைவையில் 3 பாடங்களில் சித்தியெய்திய அனைவரும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழக மூதவையினால் உறுதிசெய்யப்பட்ட வேறு தகைமை கொண்டவர்களும் (அலுவலக அறிவிப்புப் பலகையில் பார்வையிடலாம்) விண்ணப்பிக்கலாம் என்று பிராந்திய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்களை யாழ் மத்திய கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இதேவேளை —

சிறுவணிக முகாமைத்துவ கற்கைநெறியைப் பயிலும் மாணவர்களுக்கான செயற்றிட்ட அறிக்கை ஆவணங்கள் எடுத்துவரப்பட்டுள்ளன. மாணவர்கள் தமது மாணவர் பதிவுப்புத்தகத்துடன் வந்து யாழ். மத்தியகல்லூரியில் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-6)

## வெளி நாடுகளில் இருந்து வந்த பொருள்கள் திருட்டு? தபால் திணைக்களத்தில்

கொழும்பு, ஓக. 31

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்டிருந்த் லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான வைரக் கற்கள் உட்பட பல பொருள்களும், சுமார் 4 ஆயிரம் கடிதங்களும் தபால் திணைக்களத்தில் வைத்து காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நான்கு மாத காலத்துக்குள் வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்பட்ட இந்தப் பொருள்கள் தபால் திணைக்களத்தில் வைத்தே களவாடப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

12 லட்சம் ரூபா பெறுமதியான வைரக்கற்களும், பெறுமதி மிக்க இலத்திரனியல் பொருள்களும் இவற்றில் அடங்கும்.

காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் போன்றவற்றுடன் வந்த தபால்களும் காணாமற்போயுள்ளதாகவும்—

இவை தொடர்பாக பூரண விசாரணைகளை மேற்கொள்ளுமாறும்— தபால் தொலைத் தொடர்பு ஊழியர் சங்கம் கோரியுள்ளது.

(ஐ-9–10)

## தண்ணீர்த் தாங்கி அமைப்பு

அரியாலை, ஓக. 31

கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவன உதவியுடன குடி தண்ணீர்த் தாங்கி ஒன்று வைக்கபபட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

ஈச்சமோட்டை பிரதான வீதியிலும் மேலும் ஒரு குடி தண்ணீர்த்தாங்கி அமைக்கப் பட்டுள்ளது.

(ஐ-17)

### நாளை

ஆவணி - 16

செவ்வாய்க்கிழமை

திதி: தசமி

முன்இரவு 10.37 வரை.

நட்சத்திரம்: மூலம்

முன்இரவு 07.32 வரை.

ஆவணிமூலம்

சுபநேரம்: 10.35 - 12.05

ராகுகாலம்: 03.05 - 04.35

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

### உதயவாக்கு

நாம் பிறரை இழிந்தவர்கள் என்றும், நம்மையே பெரியவர்கள் என்றும் நினைக்கும் போதுதான் அகந்தை வரும்.

- வினோபாஜி

## கிராமசேவையாளர் மூலம் சிறுவர்களின் விவரம்

வலி. வடக்கு, ஓக. 31

யாழ். மாவட்டத்திலுள்ள சிறுவர்கள் பற்றிய விவரங்கள் கிராம அலுவலர்களின் மூலம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் சேகரிக்கப்படுகின்றன.

யாழ். மாவட்டத்திலுள்ள 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் பாடசாலை செலலாதோர், சிறுவயதில்தொழிலுக்கு அமர்த்தப்பட்டுள்ளோர், ஊனமுற்ற பிள்ளைகள், இழந்த பிள்ளைகள், காவலில் வைக்கப்பட்டுள்ளோர், துஷ்பிரயோகத்திற்கு உட்பட்ட பிள்ளைகள் என்று பல்வேறுவகையானோரின் விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன.

மேற்படி தலைவர்கள் மூலம் பிள்ளைகளின் நலன் பேணுவதற்கு பிள்ளைகளின் உரிமைகள் கண்காணிப்புக் குழு நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளது.

(ஐ-86)

நல்லூர் பிரதேச...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டபத்துக்கு அடிக்கல்

சுன்னாகம் மயிலணிவடலி அம்மன் கோவிலுக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான அத்திவாரமிடல் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் குருமகா சந்நிதானம் சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் கலந்து கொண்டு ஆசியுரை நிகழ்த்துவார்; திருமதிமங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் சிறப்புரையாற்றுவார்.

(ஐ-110)

### 1996-97 ஆண்டுகாலப் பகுதிக்குரிய

# வருமான, வியாபார மொத்த வரியாக யாழ். மாவட்டத்தில் 5 கோடி ரூபா

யாழ்ப்பாணம், ஒக. 31

யாழ். மாவட்டத்தில் 1996, 97 ஆம் ஆண்டு காலப் பகுதிக்குரிய வருமான வரியாகவும், வியாபார மொத்த வரியாகவும் 5 கோடி ரூபா (50மில்லியன்) இறைவரித் திணைக்களத்தினால் பெறப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இரு ஆண்டுகளிலும் 50 வீதமான வர்த்தகர்கள் தமக்குரிய வரியைச் செலுத்தியுள்ளனர்.

இதேவேளை

பல வர்த்தகர்கள் பொருள்கள் விற்பனவு பற்றுச்சீட்டு முறையைக் கடைப்பிடிப்பதில்லை என்று அதிகாரிகளின் பரிசோதனைகளின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல வர்த்தகர்களும் பொருள் விற்பனை செய்யும்போது அதற்கான பற்றுச்சீட்டுகளை நுகர்வோருக்கு வழங்கவேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டிருப்பதாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்திலுள்ள உள் நாட்டுஇறைவரித் திணைக்களம் தற்போது தனியார் கட்டட மொன்றில் இயங்கிவருகிறது. திணைக்கள பணிகளைத் தாமதமின்றி செய்வதற்கு மூன்று வரி மதிப்பீட்டாளர்களும் ஆறு வரி உத்தியோகஸ்தர்களும் நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-5)

## பட்டதாரிகள் விவரம் சேகரிப்பு

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் 1997 ஆம் ஆண்டில் யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறிய வேலையற்ற பட்டதாரிகளின் விவரங்களைச் சேகரித்து வருகிறது.

1997 இல் பட்டம் பெறத் தகுதியுள்ள அனைவருக்கும் பட்டதாரிகள் சங்கத்தில் சேருவதற்குரிய விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தலைவர் ரீ. சந்திரகாசன் தெரிவித்தார்.

# டிறிபேர்க் கல்லூரியின் ஒரு பகுதி புனரமைப்பு

சாவகச்சேரி, ஒக. 31

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளின் போது தேசமடைந்திருந்த சாவகச்சேரிடிறிபேர்க் கல்லூரியின் கண்டி வீதிப் பக்கமாகவுள்ள அதிபர் அலுவலகக் கட்டடத் தொகுதி தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது. இதற்கான நிதியைக் கல்வித் திணைக்களம் வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத் திருத்த வேலைகளைத் தொடர்ந்து இக் கட்டடத் தொகுதியில் மீண்டும் வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

இதே வேளை—

இக் கல்லூரியின் மூன்றிலொரு பகுதிக் கட்டடத்தில் அதாவது ஆரம்பப் பாடசாலைப் பிரிவில் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர். பாடசாலையில் திறந்த வெளியரங்கும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஐ-31)

# வலைப்பந்தாட்ட அணிகள் திருமலை சென்றன

வலிகாமம் தெற்கு, ஒக. 31

எதிர்வரும் 5, 6 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெற உள்ள மாகாண மட்ட மெய்வல்லுநர் போடிகளில் கலந்துகொள்ள சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி ஆகிய வற்றைச்சேர்ந்த வலைப்பந்தாட்டக் குழுவினர் திருகோணமலைக்கு பயணமாகியுள்ளனர்.

ஏனைய போட்டியாளர்கள் இவ்வார முற்பகுதியில் திருகோணமலை செல்வதற்கான ஒழுங்குகளை கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராசா மேற்கொண்டு வருகின்றார்.

(ஐ-152)

## மாதர் சங்கம்

சண்டிலிப்பாய், ஒக். 31

அளவெட்டி கிழக்கு கிராம அலுவலர் பிரிவுக்கான மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அண்மையில் வலிகாமம் வடக்கு பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கலைமகள் சிவராஜாவினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. நிர்வாகிகள் தெரிவும் இக்கூட்டத்தில் இடம்பெற்றது.

(ஐ-135)

### சந்நிதி ஆலய உற்சவம்

# வல்லையில் 'பாஸ்' பெற காத்து நிற்கும் பக்தர்கள்!

வடமராட்சி, ஒக. 31

தொண்டமானாறு செல்லச் சந்நிதி கோவிலுக்கு யாழ்ப்பாணம். நல்லூர், வலிகாமம் பகுதிகளிலிருந்து செல்லும் பக்தர்கள் வல்லையில் அனுமதிப் பத்திரம் (பாஸ்) பெறுவதில் பலமணி நேரத்தைச் செலவிடவேண்டியுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் சந்நிதி கோவில் உற்சவத்தில் தினமும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

வடமராட்சிப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களிலிருந்து வரும் பக்தர்கள் சந்நிதிக்குச் செல்வதற்கு வசதியாக வல்லைச் சந்தியிலுள்ள சோதனைச்சாவடியில் அனுமதிப்பத்திரம் (பாஸ்) வழங்கும் அலுவலகம் ஒன்று செயற்பட்டு வருகின்றபோதிலும் அங்குமிகத் தாமதமாகவே அனுமதிப்பத்திரங்கள் (பாஸ்) வழங்கப் பட்டு வருகின்றன.

அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக வல்லைச் சந்தியில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் நீண்ட நேரம் காத்திருப்பதுடன் அவர்களை ஏற்றி வந்த வாகனங்களும் நீண்ட வரிசையில் காத்து நிற்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

அனுமதிப்பத்திரம் (பாஸ்) பெறுவதில் ஏற்படும் தாமதம் மணிக்கணக்காக நீண்டு செல்வதால் சந்நிதிக்குச் செல்லும் பக்தர்கள் மிக அவசரமாக தமது வழிபாடுகளை முடித்துக்கொண்டு திரும்ப வேண்டியுள்ளது.

(ஐ-173-178)

### தமிழகத்தவர்களுடன் ஒப்பிடுமளவுக்கு

# சிற்பக்கலை மூலம் சமயத்துக்கும் கலாசாரத்துக்கும் சேவை செய்பவர்

## மணிவிழாவில் பாராட்டு

திருநெல்வேலி, ஒக. 31

''ஈழத்திரு நாட்டிலுள்ள இந்து ஆலயங்கள் பலவற்றில் சித்திரத் தேர்களையும், சப்பறங்களையும், வாகனங்களையும் தமது கைவண்ணத்தால் அழகுற உருவாக்கித் தந்த ''சிற்பகலாமேதை'' ஆறுமுகம் ஜீவரத்தினம் அவர்களுக்கு ''கலாபூஷணம்'' விருது கிடைத்திருப்பது எமக்கு பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. தமிழ் நாட்டின் தலைசிறந்த சிற்பக்கலைஞர்களோடு ஒப்பிடக்கூடிய வகையில் இந்த மண்ணில் இருந்து எமது சமயத்திற்கும் கலாசாரத்திற்கும் சிற்பக் கலை மூலம் அரும்பெருஞ் சேவையாற்றி வரும் இவர் அனைவரினதும் போற்றுதலுக்கும் பாராட்டுக்கும் உரியவராகத் திகழ்கின்றார்.

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரசுத்தி ஆலய முன்றலில் ''கலாபூஷணம்'' ஸ்தபதி ஆறுமுகம் ஜீவரத்தினத்துக்கு நடத்தப்பட்ட பாராட்டு விழாவிலும், மணி விழாவிலும் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குகையில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் வ. சிவராஜசிங்கம் தலைமையில் விழா அண்மையில் நடைபெற்றது.

பாராட்டுரை வழங்கிய ஆசிரியர் ஆறு. திருமுருகன் தெரிவித்தாவது:-

பேசாமல் இருக்கும் மரங்களை சித்திரங்களாய் பேச வைக்கும் கலைஞரான ஜீவரத்தினம் அவர்கள் பல விழாக்களைக் கண்டு பாராட்டுப்பெற்றவராயினும் பிறந்த மண் இன்று வாழ்த்துவதற்கு முன்வந்துள்ளது தனிச் சிறப்பாகும். வாழ்த்துகளுக்கெல்லாம் உரித்தான இவர் இளவயதில் பெறவேண்டிய கல்வியை பரமேஸ்வராக் கல்லூரியில் பெற்றதால் அறிஞர்களோடு சேர்ந்து வாழ முடிந்தது. உரிய பணத்தைக் கொடுக்கப்பிந்தினாலும்உரிய காலத்தில் தேர் வெள்ளோட்டங்களை சில ஆலயங்களில் நடத்தி உதவிய பெருந்தகை இவர்.

இந்து சமய பேரவையின் செயலாளர் சி. சக்திகிரீவன் உரையாற்றுகையில்—

யுத்தகால அனர்த்தங்களின் போது எண்ணூற்றுக்குமதிகமான இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டன. ஆலயங்களிலுள்ள தேர்கள், மஞ்சங்கள், வாகனங்கள் ஆகியனவும், பல ஆலய சொத்துக்களும் சேதமாக்கப்பட்டுள்ளன. இதற்கான நஷ்டஈட்டினைப் பெற முடியாது இந்த ஆலய நிர்வாகங்கள் இன்று சிரமப்படுகின்றன. இவை மிகுந்த சிரமத்தின் பேரில் ஜீவரத்தினம் போன்ற கலைஞர்களால் உருவாக்கப்பட்டன. பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் பிரமாண்டமான ஐந்து தேர்கள் ''கலாபூஷணம்'' ஜீவரத்தினம் அவர்கள் மேற்பார்வையில் — அவரின் கை வண்ணத்தில் உருவாக்கப்பட்டன. இது போன்ற பல தேர்களின் இன்றைய நிலைமையை எண்ணிப் பார்க்கும் போது மிகவும் வேதனையாகவும், கவலையாகவும் இருக்கின்றது. தமிழினத்திற்கு இன்று தெய்வீக பலமே — ஆன்மீக பலமே துணையாக இருக்கின்றது. இப் பலத்தின் மூலம் அழிந்த, சேதமடைந்த எங்கள் ஆலய சொத்துகளைப் புனர்நிர்மாணம் செய்வோம். இதற்கு இவ் விழா நாயகர் ஜீவரத்தினம் அவர்களும் அவரது சிற்பாலய குழுவினரும் துணையாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். அவர் நீடூழி வாழ்ந்து சேவை யாற்ற வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் — என்றார்.

இந்து சமூக கலாசார நிலையங்களின் பேரவை இணைச் செயலாளர் ப. சிவலோக நாதன் பாராட்டுரை நிகழ்த்துகையில்—

பண்டைய பண்புகளும், தத்துவங்களும் மாறாத விதத்தில் சித்திரத் தேர்களை உருவாக்கிவரும் இவர் இங்கு மட்டுமன்றி சிங்கப்பூர், மலேசியா ஆகிய வெளி நாடுகளிலுள்ள இந்து ஆலயங்களுக்கும் தேர்களையும், வாகனங்களையும் தமது கை வண்ணத்தில் உருவாக்கிக் கொடுத்துள்ளார். இன்று வளர்ந்து வரும் கலைஞர்களும் இவரை முன் உதாரணமாகப் பின்பற்றி சேவை யாற்றுவார்கள் என்று எதிர் பார்ப்போம்— என்றார்.

எஸ். என். இராமச்சந்திரா, திருநெல்வேலி கிராம அலுவலர் செ. நித்தியானந்தராசா, பிரம்ம ஸ்ரீ ஜெகதீஸ்வரசர்மா ஆகியோர் உட்பட மற்றும் பலர் இவ் விழாவிற் கலந்து கொண்டு பாராட்டுரை நிகழ்த்தினார்கள்.

(ஐ-135)

## வாசகர் திருமுகம்

### ஆங்கில அறிவில் பின்னடைவு; நாடளாவிய பிரச்சினை

ஆங்கிலக் கல்வி போதனை சம்பந்தமாக 1998 – 07 – 23 ஆம் திகதிய உதயனில் ச. கிருஷ்ணன் எழுதிய கட்டுரையில், பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர்கள் ஆங்கில அறிவில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவரின் கூற்று சரியானதே. ஆனால் இந்த நிலைக்குக் காரணம் கல்வி அமைச்சும், கல்வி அதிகாரிகளும் எனக் கூறியுள்ளார். அதேசமயம், அடுத்த பந்தியில் ''இந்த நிலைக்குக் காரணம் முன்னைய கல்வித்திட்டங்களில் காணப்படும் குறைபாடு'' எனக் கூறியுள்ளார். கருத்தில் முரண்பாடு தெரிகிறது.

யாழ். கல்வித்திணைக்கள வலயம் ஒன்றைச் சார்ந்த ஆங்கிலப் பிரிவின் உதவிக்கல்விப்பணிப்பாளரும், அவரின் உதவியாளர்களும் யாழ். இந்துக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் ஆங்கிலக் கல்வி வளர்ச்சி சம்பந்தமான கருத்தரங்குகள், கற்பிக்கும் முறைகள், வகுப்பறை நடைமுறைகள் சம்பந்தமாக ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தி வருகின்றனர்.

இக்கருத்தரங்குகள் பகுதி பகுதியாகவும் நடத்தப்பட்டன. ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 6 வரை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு குறிப்பிட்ட நாள்களிலும், உயர்வகுப்பு ஆசிரியர்களுக்கு வேறு தினங்களிலும் நடைபெற்றன. அப்படியான கருத்தரங்குகள் வருடத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன என்பதையும், அக்கருத்தரங்குகளில் நானும் பங்குபற்றிக்கொண்டு வருகின்றேன் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

இவை தவிர சீடா (சீ. ஐ. டி. ஏ), யுனிசெவ் போன்ற தொண்டர் நிறுவனங்களின் ஆதரவுடன், வாராந்தம் மாதிரிப் பரீட்சைகளும், கற்பித்தலும் நடைபெறுகின்றன. இவையாவற்றையும் நடத்துவது கல்வி அதிகாரிகள் தான்.

1955 ஆம் ஆண்டுக்கு முன்பு சிரேஷ்ட கல்வித் தராதரப் பத்திரம் (எஸ். எஸ். சீ) நடைமுறையில் இருந்தது ஆங்கிலம், தமிழ், கணிதம் ஆகியன கட்டாய பாடங்களாக இருந்தன. அன்று எல்லாப் பாடங்களும் ஆங்கிலத்தில் போதிக்கப்பட்டன. தாய் மொழியில் கல்வி கற்பிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது, ஆங்கில மொழியின் தரம் மாணவர்களிடையே குன்றி வருவது தவிர்க்க முடியாததாகின்றது.

இந்த நிலை வடமாகாணத்தில் இன்றி தென் இலங்கையிலும் நிலவுகின்றது. மாத்தறை பாணந்துறை, பதுளை, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் நான் சேவை யாற்றிய போது இதை அவதானித்துள்ளேன். இது ஒரு நாடளாவிய பிரச்சினை. தமிழ்ப் பகுதிகளில் மட்டும் காணப்படுவதாக எண்ணுவது தவறு.

ஆங்கில ஆசிரியர்

கந்தர்மடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்கள் விழிப்பாக இருந்தால்
# திருட்டு முயற்சிகளைத் தடுக்கலாம்
## யாழ். பொலீஸ் அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ். நகரில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் திருட்டுச் சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்கு மக்கள் விழிப்புக்குழுக்களை அமைத்துச் செயற்படவேண்டும். இதற்குப் பொலீஸார் ஒத்துழைப்புத் தருவர் என்று யாழ். பொலீஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரி கே. மோகன்தாஸ் தெரிவித்தார்.

'யாழ்ப்பாணத்தில் தொடரும் கொள்ளைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த முடியாதா' என்று அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கொள்ளையர்களுடைய நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு எமக்குத் தேவைப்படுகிறது. இரவில் யாராவது வந்து கதவு தட்டி இராணுவம் வந்திருக்கிறது, பொலீஸ் வந்திருக்கிறது என்று எழுப்பினால் புத்திசாதுரியமாக நடந்துகொள்ள வேண்டும்.

பொலீஸாரைப் பொறுத்தவரையில் அவர்கள் இரவு வேளையில் எந்த வீட்டிற்கும் வரமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றேன். எனவே இந்த விடயத்தில் எச்சரிக்கையாக நடந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன். வீட்டுச் சுற்றாடலில் சந்தேகத்திற்கிடமான முறையில் யாராவது நடமாடினால் உடனடியாக அருகிலுள்ள இராணுவ முகாமிற்கு அறிவித்தால் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள்.

சைக்கிள் திருட்டுக்களும் யாழ்ப்பாணத்தில் தற்போது அதிகரித்து வருகின்றன. பூட்டில்லாத சைக்கிள்களே திருடப்பட்டு வருகின்றன. எனவே சைக்கிள்களைப் பூட்டிப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியது பொதுமக்களின் பொறுப்பாகும். சைக்கிள் திருட்டுக்களில் ஈடுபட்ட பலரை நாம் கைது செய்துள்ளோம். அவர்கள் சைக்கிள் திருட்டில் நிபுணத்துவமிக்கவர்களாகக் காணப்படுகிறார்கள். ஒருவர் 5 அல்லது 6 சைக்கிள் திருட்டுக்களில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பல திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக எமக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். திருட்டுக்களுடன் தொடர்புடையவர்களின் பலரது விவரங்கள் எமக்குக் கிடைத்துள்ளன. விசாரணைகள் நடத்தி வருகிறோம். விரைவில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-5)

## பாராட்டு வைபவம்

யாழ்ப்பாணம், ஓக. 31

முன்னாள் கிராம அலுவலர் ச. கனகலிங்கம் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டிருப்பதைப் பாராட்டும் வைபவம் இன்று திங்கள் பிற்பகல் 5 மணிக்கு நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் முன்றலில் நடைபெறவுள்ளது.

ஆலய நிர்வாகமும், நல்லூர் வடக்கு சனசமூக நிலையமும், விநாயகர் விளையாட்டுக்கழகமும் இணைந்து இந்த நிகழ்ச்சியை நடத்தவுள்ளன. (ஐ)

## தொலைபேசி இணைப்பு

நீர்வேலி, ஓக. 31

புன்னாலைக்கட்டுவன் சந்தியில் தனியார் தொலைத்தொடர்பு நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

புன்னாலைக்கட்டுவன், நவக்கிரி, கரந்தன், ஈவினை, அச்செழு, ஊரெழுப் பகுதி மக்களின் தேவைக்கு வசதியாக இந்த நிலையம் அமையவுள்ளது. (ஐ-110)

## சமய சந்நிதிகளில்

வலி-தெற்கு ஓக. 31

சங்குவேலி ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் ஆலய பிரம்மோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

செப்ரெம்பர் 4ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 5ஆம் திகதி பகல் 11 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெற உள்ளன. உற்சவ காலங்களில் தினமும் மாலை வேளையில் சமயச் சொற்பொழிவுகள் இடம்பெற்று வருகின்றன. (ஐ-152)

★ ★ ★

நீர்வேலி வடக்கு அருள்மிகு சங்கணங் கடவை இராஜராசேஸ்வரி அம்பாள் ஆலய கும்பாபிஷேகத்தையொட்டி தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெறுகின்றது உற்சவ குருக்களாக சிவஸ்ரீ கு. தியாகராசக் குருக்கள் பணியாற்றுகிறார். (ஐ-110)

★ ★ ★

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் தேவஸ்தான அலங்கார உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் உற்சவங்களில் காலை 10 மணிமுதல் விசேட அபிஷேக ஆராதனைகளும், சுவாமி வீதியுலாவும் இடம் பெறும்.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் அடியவர்களுக்கு மண்டைதீவு கடற்படை முகாமில் அனுமதி பெறப்பட்டுள்ளது என தேவஸ்தான தர்மகர்த்தா வி. திருநாவுக்கரசு அறிவித்துள்ளார். (ஐ-8)

## மின்சார அலுவலகத்துக்கு தொலைபேசி

சாவகச்சேரி, ஓக. 31

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகத்துக்குத் தொலைத்தொடர்பு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் இந்த இணைப்பு வழங்கப்பட்டது.

இந்த அலுவலகம் சாவகச்சேரி டச்சு வீதியையும், பருத்தித்துறை வீதியையும் இணைக்கும் கென்ஸ்மன் வீதியில் தனியார் வீடொன்றில் இயங்கி வருகின்றது. (ஐ-31)

## மயானத்தில் மண்டபம்

திருநெல்வேலி, ஓக. 31

நீர்வேலி வடக்கு மகா சிவன் இந்து மயானத்தில் புதிய இளைப்பாறு மண்டபம் ஒன்று நிறுவப்படவுள்ளது. இதற்கான அடிக்கல்லை வலி. கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாஜத்தின் செயலாளர் க. தர்மலிங்கம் அண்மையில் நட்டு வைத்தார்.

இதேவேளை —

இந்த மயானத்திற்கு கிணறு ஒன்றை நிறுவுவதற்கும் 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-135)


## - வாழ்த்துகின்றோம் -

முன்னாள் கிராம உத்தியோகத்தரும்
நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார்
தேவஸ்தான உப தலைவரும்,
நல்லூர் வடக்கு சனசமூக நிலைய முன்னாள் தலைவரும்,
விநாயகர் விளையாட்டுக்கழக போஷகருமான

**உயர்திரு ச. கனகலிங்கம்**

அவர்கள் சமாதான நீதிவானாக
நியமிக்கப்பட்டமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தானம்,
நல்லூர் வடக்கு ச.ச. நிலையம்,
விநாயகர் விளையாட்டுக் கழகம்.

(58800)

யாழ். மாவட்ட
## புகைப்படப் பிடிப்பாளர் சங்க வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 01 - 09 - 1998 செவ்வய்க்கிழமை காலை 10-00 மணிக்கு (பழைய நேரம்) நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற இருப்பதனால் அனைத்து அங்கத்தவர்களையும் சமுகந் தரும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

தலைவர் செயலாளர்

(58794)

**நாகம்ஸ் சினிமா**
சுன்னாகம்
கார்த்திக் சௌந்தர்யா
கவுண்டமணி- செந்தில்
நடித்த
**பொன்னுமணி**
இனிய பாடல்கள்
நிறைந்த படம்
திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படம்.
காட்சிகள்:- 10-30, 2-30
(58803)

(2 - 11 வரை)
மாதாந்தப் பயிற்சி பரீட்சை
**புலமைப் பரிசில் 1999**
வினாத்தாள்களை பெற்றுக்கொள்ளலாம்.
**BOND**
(58804)

**ஞானோதய அக்கடமி**
கண்டி வீதி, சாவகச்சேரி.
Spoken English
With
Grammar
ஆரம்பம்: 02-09-1998
காலை 10 மணி
ஆசிரியர்:
BRITTO
(58808)

**BARATHY**
சித்தன்கேணி.
A/L 99 Pure/App.
நுண் கணிதம்
தாயங்கள்
A/L 2000
இணைந்த கணிதம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
01-09-98 3-00 மணி
ஆசிரியர்:
திரு. அம்பிகைபாகன்
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
(58809)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் மூத்த ஆசிரியை
**திருமதி சௌ. சரவணபவானந்தனின்**
அன்புக் கணவர்

**சிவசம்பு சரவணபவானந்தன்**

அவர்களின் திடீர் மறைவினால் ஆழ்ந்த துயரம் அடைகின்றோம். அன்னாரினது ஆத்ம சாந்திக்காகவும் குடும்பத்தினரின் மன அமைதி வேண்டியும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்,
சக ஆளணியினர், மாணவர்கள்.
யா/ வேம்படி மகளிர்
உயர்தர பாடசாலை.

(58805)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி எலிசபேத் பூரணம் கிறிஸ்தோப்பர்
(பூரணம் ஆசிரியை)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை திருமதி எலிசபேத் பூரணம் கிறிஸ்தோப்பர் 29-08-98 சனிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் அ'கஸ்ரீன் கிறிஸ்தோப்பரின் அன்பு மனைவியும், அமரர் திருமதி மேரிதிரேசா (பேபிசிமியோன்), J. T. M. கிறிஸ்தோப்பர் (இளைப்பாறிய எழுதுவினைஞர்), அமரர் திருமதி [illegible] அன்புராஜா (ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), அருட்சகோதரி பெனிக்னா கிறிஸ்தோப்பர் (திருச்சிலுவை கன்னியர்சபை முகத்துவாரம்), [illegible] கிறிஸ்தோப்பர் ''மன்று'' (மட்டக்களப்பு), திருமதி லூட்ஸ்தவமலர், அருட்தந்தை C. A. G. கிறிஸ்தோப்பர் (நற்கருணைநாதர் சபை, கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், சூசன் மேரிராணி, அன்புராஜா, குளோடியா, மைக்கல் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுகந்தறோகான், சுகந்தநேசன், சுகந்தநாதன், அனற்செல்வினி, அனிதா, பிரதீபன், வனுதா, நிரோஷன், வசந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சயந்தன், நிசேவிதா, அஜந்தன், கௌசிகா, கறோளின், அரவிந்தன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
J T. M. கிறிஸ்தோப்பர்
(மகன்)

32/21, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம்.

(58801)

### திருமதி கணபதிப்பிள்ளை தில்லாத்தைப்பிள்ளை

நெடுந்தீவு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி கணபதிப்பிள்ளை தில்லாத்தைப்பிள்ளை 30-08-1998 நேற்றுக் காலமானார்.

இவர் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், பாசமலர், நிர்மலராணி, சுந்தரராசன், செல்வராணி, சிறிதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், லோகநாதன், தியாகராசா யோகாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியாரும், பெரியபிள்ளை, நாகம்மா, கந்தையா, காலஞ்சென்ற கமலம், பாலசிங்கம், சிந்தாமணி, கோபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 31-08-98 திங்கட்கிழமை 3.30 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ம. யோகராசா
(பெறாமகன்)

3 ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு.

(58811)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடித்துவக்கு நியமனம் குறித்து
# 2 பொலீஸ் உயர் அதிகாரிகள் அதிருப்தி

கொழும்பு, ஓக. 31

பொலீஸ் மா அதிபராக லக்கி கொடித்துவக்கு நியமிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அதிருப்தியடைந்துள்ள சிரேஷ்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர்கள் இருவர் இளைப்பாறும் கடிதங்களை அனுப்புவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதைய பொலீஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ராஜகுரு இன்றுடன் ஓய்வு பெறுவதையடுத்து புதிய பொலீஸ் மா அதிபராக லக்கி கொடித்துவக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தால் அதிருப்தியடைந்துள்ள சிரேஷ்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர்களான கிங்ஸ்லி விக்கிரமசூரியவும், காமினி குணவர்த்தனவும் லக்கி கொடித்துவக்கைவிட மூத்த அதிகாரிகள் என்றும் —

அத்துடன் முக்கிய பொறுப்புக்களை வகித்து சிறந்த சேவையாற்றி வருபவர்கள் என்றும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-3-10)

# பொலீஸ் அதிகாரிகள் பலர் கட்டாய லீவில் வீட்டுக்கு!

தற்போதைய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி விசாரணைக் குழுக்களால் குற்றவாளிகளாகக் காணப்பட்ட அனைத்துப் பொலீஸ் அதிகாரிகளும் கட்டாய லீவில் வீட்டுக்கு அனுப்பப்பட உள்ளனர்.

கடந்த வாரம் பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஒருவரும் பல பொலீஸ் அதிகாரிகளும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

விஜய குமாரதுங்க படுகொலை விசாரணைக் குழுவால் குற்றவாளிகளாகக் காணப்பட்ட 14 பொலீஸார் அடுத்த ஓரிரு வாரங்களில் கட்டாய லீவில் அனுப்பப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கட்டாய லீவில் அனுப்பப்படவுள்ள பொலீஸ் அதிகாரிகளில் பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள் மூத்த பொலீஸ் அத்தியட்சகர்கள் பொலீஸ் அத்தியட்சகர்கள் ஆகியோர் அடங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## நியமனம்

மட்டக்களப்பு மாவட்ட விலை மதிப்பீட்டு திணைக்களத்துக்கு உதவி விலை மதிப்பீட்டாளராக பாலசுந்தரம் பாலேந்திரன் பொதுச்சேவை ஆணைக்குழுவால் பதவிஉயர்வுடன் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-173)


யாழ்ப்பாண மருத்துவ சங்க

ஆதரவில்

யாழ்ப்பாண மருத்துவ சங்க

நூலக நிதிக்காக

யாழ். மருத்துவ பீட மாணவர்கள்

அளிக்கும்

"முற்றிலும் புதிய பாணியிலான"

'இன்னிசை அருவி'

காலம்: 05 - 09 - 98 / 06 - 09 - 98 மாலை 2-00 — 5-00 மணி (புதிய நேரம்)

இடம்: கைலாசபதி கலையரங்கு

யாழ். பல்கலைக்கழகம்

முக்கிய குறிப்பு:

★ ஒரு நுழைவுச் சீட்டுக்கு ஒருவர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

★ இசை அரங்கின் நுழை வாயில்கள் 1.55 மணிக்கு (புதிய நேரம்) மூடப்படும். அதன் பின் எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள். (58778)

NEW SCIENCE HALL

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

99 A/L DAY CLASSES

98 A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது

ஆரம்பம்: 01 09 98

(58798) செவ்வாய் காலை 7.00 மணி

GENERAL ENGLISH COURSE

ஆரம்பம்: 01 - 09 - 1998

முற்பகல் 10 மணி

காலை, மாலை, வார இறுதி வகுப்புகள்

NEW SCIENCE HALL

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(58799)

SPOKEN ENGLISH WITH GRAMMAR

LECTURES BY:- M. A. HARI

2ஆவது புதிய பிரிவு

ஆரம்பம்: 03 - 09 - 1998

வியாழன் மாலை 5.00 மணி

TUESDAY / THURSDAY — 5 P.M. — 6 P.M.

★ அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன; முந்திக் கொள்ளுங்கள்!

- DIRECTOR

HARY'S INSTITUTE

KONDAVIL EAST, KONDAVIL.

(58789)


## ஐ. தே. க...

(முதலாம் பக்கத் தொடர்)

அதே சமயம் — குருநாகலில் ஏற்பாடு செய்யப்பட்ட ஐ.தே.கவின் தேர்தல் எதிர்ப்புக் கூட்டம் பரபரப்புக்கு மத்தியில் நடைபெற்றது.

இக் கூட்டம் நடைபெற்ற சமயம் அப் பகுதியில் ரயர்களைப் போட்டு எரிக்கும் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டிருந்தனர். (இ-3)


எமது இன்றைய வெளியீடுகள்!

சிவாஜி, முரளி, ராதிகா நடித்த

என் ஆசை ராசாவே

அர்ஜுன், தபு நடித்த

தாயின் மணிக்கொடி

ரகுவரன் நடித்த

கள்வன்

இப் படப் பிரதிகளை மதியம் 1-30 க்கு பின்னர் பெற்றுக்கொள்ளலாம்.

சுப்பஸோ வீடியோ

யாழ்ப்பாணம்.

(சி/4711)

எமது இன்றைய வெளியீடு!

சிவாஜிகணேசன், முரளி நடித்த

என் ஆசை ராசாவே

(ஒறிஜினல் பிரதி)

உயிரே

அடுத்த வெளியீடு!

தாயின் மணிக்கொடி

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்,


# தேர்தல் ஒத்திவைப்பை எதிர்த்து ஐ.தே.க. வழக்கு

## நாளை மறுதினம் தாக்கல்

கொழும்பு, ஓக. 31

தெற்கு மாகாண சபைத் தேர்தல்களை அவசரகால விதிகளின் கீழ் ஒத்திவைத்த அரசின் முடிவை எதிர்த்து ஐ. தே. க. நாளை மறுதினம் கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவிருப்பதாக ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் சொலிஸிஸ்டர் ஜெனரல் ஜிப்ரி அலீஸ் இந்த வழக்கைத் தாக்கல் செய்யவிருக்கிறார்.

ஐ. தே. கவின் சட்ட நிபுணர் குழு இது தொடர்பான சட்டச்சிக்கல்கள் குறித்து ஆராய்ந்ததாகவும் —

அரசமைப்புக்கு சவால் விடும் வகையில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படவிருப்பதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

''தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பின் விதிகளுக்கு முரணாக அரசாங்கம் மாகாண சபைத் தேர்தல்களை பின்போட்டது'' என்று ஐ. தே. க. பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (இ-3)

# 2 ஆயிரம் தொலைபேசி இணைப்புகள் விரைவில்

## பரிவர்த்தனை வருகிறது

யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ். மாவட்டத்தில் இரண்டாயிரம் தொலைபேசி இணைப்புக்களை வழங்க வசதியான பரிவர்த்தனை சாதனம் (எக்சேஞ்) விரைவில் அமைக்கப்பட விருக்கிறது.

ரெலிக்கொம் நிறுவனத்தின் வடக்கு - கிழக்கு பொது முகாமையாளர் எஸ். கனகசூரியர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார். இந்த பரிவர்த்தனை சாதனம் கொழும்புக்கு வந்து சேர்ந்துள்ளது. விரைவில் அது கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும். பெரும்பாலும் அடுத்த வருட ஆரம்பத்தில் இதன் மூலம் இணைப்புக்களை வழங்க முடியும் என எதிர்பார்க்கிறோம் — இப்படி அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியிடங்களுக்கும், வெளியிடங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும் பகல் நேரங்களில் தொடர்பு பெறுவதில் உள்ள தாமத நிலை குறித்துக் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் 500க்கு மேற்பட்டவர்களுக்கு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு ஏற்ப பரிவர்த்தனை கணனி வசதி இல்லை. இதன் காரணமாகவே இத்தாமதம் ஏற்படுகிறது.

அதே நேரம் யாழ்ப்பாணத்தில் உயர்ந்த கோபுரம் ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது; அதற்கான உபகரணங்கள் வந்து சேர்ந்துள்ளன. இந்தக் கோபுரத்துக்கான தளத்தை அமைப்பதற்கான பொருள்கள் வந்து சேரவில்லை.

பெரும்பாலும் இந்தக் கோபுரம் அமைக்கும் பணி வருட இறுதிக்குள் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கிறோம். அதன்பின்னர் நிலைமை சீரடையும்.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-3)

## ஹர்த்தால் ஒத்திவைப்பு

வவுனியாவில் புதிதாகக் கொண்டு வரப்பட்டுள்ள எரிபொருள் கட்டுப்பாடுகளை எதிர்த்து புளொட் அமைப்பினர் நாளை முதல் நடத்த இருந்த ஹர்த்தால் மேலும் ஒரு வாரத்துக்கு பின்போடப்பட்டுள்ளது.

புளொட் அமைப்பின் உப தலைவர் மாணிக்கதாஸன் தலைமையில் சென்ற தூதுக்குழுவினர் வவுனியாமாவட்ட இராணுவ இணைப்பதிகாரியை நேற்றுச் சந்தித்து நடத்திய பேச்சுக்களின்போது அவர் வழங்கிய உறுதிமொழியை அடுத்தே இந்த ஹர்த்தால் பின் போடப்பட்டுள்ளதாக புளொட் அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

## பாதுகாப்பு மாநாடு

தெற்கு மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கான பாதுகாப்பு நிலைமை குறித்து ஆராய உயர் மட்ட அரச அதிகாரிகள் இவ்வாரம் கூடவிருக்கின்றனர்.

அவசர கால விதிகளின் கீழ் ஒத்திவைக்கப்பட்ட தெற்குத் தேர்தலை நடத்தக் கூடிய பாதுகாப்பு நிலைமை உள்ளதா என்பது குறித்து ஆராய இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தக்கூட்டத்தில் அமைச்சர்களும், பாதுகாப்பு அதிகாரிகளும் பங்குபற்றவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## இரண்டு ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்)

பாகப் பலரைக் கைதுசெய்து விசாரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம் — அந்தப்பகுதியில் உள்ள தண்டவாளங்கள் இனந் தெரியதாவர்களால் அகற்றப்பட்டிருந்ததாகத் தகவல் கிடைத்துள்ளன என்று கொழும்புசெய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

## வவுச்சர்

சண்டிலிப்பாய், ஓக. 31

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் உள்ள புதிய கணனி மூலம் இப் பிரதேச செயலகப் பிரிவுக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் தற்போது அச்சிடப்பட்டு வருகின்றன.

இதே வேளை இப் பிரிவில் மாதாந்த பொது சன உதவிப் பணம் பெறுபவர்களின் வவுச்சர்களும் இக் கணனி மூலம் அச்சிடுவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளதாக பிரதேசசெயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-135)

## வாதரவத்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

பிஸ்டலால் சுட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

படையினர் திருப்பித் தாக்குதல் நடத்திய போது அவர்கள் கிரனேட் ஒன்றை வீசிவிட்டு அருகில் உள்ள பனங்காணிக்குள் தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் படையினர் அப்பகுதியில் தேடுதல் நடத்திய போது இரத்த அடையாளங்களைக் கண்டதாக பலாலி செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பிரேதப்...

(முதலாம் பக்கத் தொடர்)

சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்று நடத்தப்பட வேண்டும். இதற்கு தென்னாபிரிக்காவின் தலைவர் நெல்சன் மண்டேலா தலையிட்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அணிசேரா நாடுகளின்குழு பிரதிநிதி ஒருவரிடம் இவர்கள் மகஜர் ஒன்றினையும் கையளித்தனர். (இ-9)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31-08-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org